விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 251 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 11 புதன்கிழமை (27.08.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

இங்கிலாந்து - Rs.1400/= அவுஸ்திரேலியா - Rs.1700/=
ஜெர்மனி - Rs.1900/= சுவிஸ் - Rs.2550/=
பிரான்ஸ் - Rs.2000/= இத்தாலி - Rs.2250/=
11kg க்கு மேல் 01kg க்கான கட்டணம்
GTV Express Parcel.lk
பொதிகள் சேவை
நாங்கள் உங்கள் வீட்டுக்கு டெலிவரி செய்கிறோம்
இல. 81A, பருத்தித்துறை வீதி, நெல்லியடி
இல.225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
GTV Enterprises (Pvt) Ltd (1335) 011 4 654 444

# 16 மனித எச்சங்கள் செம்மணியில் அடையாளம்

(யாழ்ப்பாணம்)

- குழந்தைகளினது எனச் சந்தேகிக்கப்படும் எலும்புக் கூடுகள் இனங்காணப்பட்டன.
- இலங்கையின் 2 ஆவதுபெரியமனிதப் புதைகுழியாக பதி வானது 'செம்மணி'.



(2ஆம் பக்கம் பார்க்க)

## சூம் மூலம் வழக்கில் இணைந்தார் ரணில்

(கொழும்பு)

சூம் (Zoom) தொழில்நுட்பம் மூலம் வழக்கு விசாரணையில் இணைந் 15ஆம் பக்கம் பார்க்க

## 300 சட்டத்தரணிகள் ரணிலுக்காக குவிந்தனர்

(கொழும்பு)

300க்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான 15ஆம் பக்கம் பார்க்க

## 'அநுர கோ ஹோம்'

### திரண்ட ரணில் ஆதரவாளர்கள்

(கொழும்பு)

"அநுர கோ ஹோம்" என ரணிலின் ஆதரவாளர் கள் 15ஆம் பக்கம் பார்க்க





## ரணிலுக்குப் பிணை

### ஒக்ரோபர் 29ஆம் திகதிவரை வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின ரால் கைது செய்யப்பட்டு 02ஆம் பக்கம் பார்க்க

## செல்வாக்கு எவ்வளவு இருந்தாலும் ஊழல் குற்றவாளிகளுக்கு தண்டனை

### ஜனாதிபதி அநுர குமார எச்சரிக்கை



(கொழும்பு)

ஊழல் செய்யப்பட்டமை நிரூபிக்கப்பட்டால் அவர் கள் எவ்வளவு செல்வாக்கான வர்களானாலும் தண்டனையை 15ஆம் பக்கம் பார்க்க

## சங்கானையில் தவறுதலாக மாத்திரை உட்கொண்ட பெண் பலி

(யாழ்ப்பாணம்)

பிறசருக்குப் பாவிக்கப்படும் மாத்தி ரையை தவறுதலாக அதிக அள வில் உட்கொண்ட குடும்பப் பெண் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

இதில் சங்கானை காளி கோவில் வீதியைச் சேர்ந்த செல்வச்சந்திரன் கமலாதேவி (வயது-68) என்ற நான்கு பிள்ளைகளின் தாயாரே உயிரிழந்த வராவார். 15ஆம் பக்கம் பார்க்க

## இரத்த வாந்தி எடுத்த குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

இரத்த வாந்தி எடுத்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந் துள்ளார்.

இதில் அராலி மத்தி வட்டுக் கோட்டையைச் 15ஆம் பக்கம் பார்க்க

## படகு மோதியதில் கடற்தொழிலாளி பலி

(கரணவாய்)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் இடம்பெற்ற படகு விபத்தில், கடற் தொழிலாளி ஒருவர் நேற்று உயிரி ழந்துள்ளார்.

இதில் புத் 15ஆம் பக்கம் பார்க்க




நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் காற்றாலைக்கு எதிரான போராட்டம்

## பொலிஸார் – போராட்டக்காரர்கள் இடையே முரண்பாடு



மன்னார் மாவட்டத்தில் காற்றாலை செயற்திட்டத்துக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போராட்டமானது 24 ஆவது நாளாக நேற்று இடம்பெற்று வருகின்ற நிலையில் மன்னார் மாவட்ட செயலக வளாகத்தில் பொலிஸார் மற்றும் போராட்டக்காரர்களுக்கிடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

நேற்று மன்னார் மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டம் மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம் பெற்று வந்த நிலையில் போராட்டகாரர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து அபிவிருத்திக் குழுத் தலைவர் மற்றும் அரசாங்க அதிபர் உள்ளடங்கலாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மகஜர் ஒன்றை வழங்குவதற்கு மாவட்டச் செயலகத்திற்குள் அமைதியான முறையில் நுழைந்த நிலையில் பொலிஸார் போராட்டகாரர்களை வெளியேற்ற முயற்சித்தனர்

இந்த நிலையில் போராட்டக்காரர்கள் வெளியேற முடியாது எனத் தெரிவித்த நிலையில் பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் முரண்பாடு இடம்பெற்றது. இந்த நிலையில் மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சம்பவ இடத்திற்கு வருகை தந்த நிலையில் போராட்டக்காரர்களை அமைதியான முறையில் மாவட்ட செயலகத்துக்குள் அனுமதித்திருந்தார்.

இந்த நிலையில் நீண்ட இழுபறிக்கு பின்னர் போராட்டக்காரர்கள் அபிவிருத்தி குழு உறுப்பினர்களையும் அபிவிருத்திக் குழுத் தலைவரையும் சந்தித்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மகஜரை கையளித்தனர்.

நேற்று குறித்த போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும் விதமாக அருட்தந்தை சக்திவேல் தலைமையில் அருட்தந்தை அருட்சகோதரிகள் கலந்து கொண்டு போராடத்துக்கு ஆதரவு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ம-7,285)

## 16 மனித...

செம்மணி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்டத்தின் மூன்றாம் பகுதி அகழ்வு பணிகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்ட நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை இரண்டாம் நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

அதன் போது ஏற்கனவே அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்ட அகழ்வாய்வுத் தளங்களை மேலும் விஸ்தரிக்கும் நடவடிக்கைகளின் போது புதிதாக 16 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அவற்றினை சுத்தம் செய்யப்பட்டுள்ளது. அவற்றினை அகழ்ந்து எடுக்கும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

மேலும் செம்மணி புதைகுழியிலிருந்து ஒரே நாளில் அதிக எண்ணிக்கையிலான மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டது நேற்றைய தினமாகும்.

செம்மணி மனித புதைகுழி வளாகத்தில் இருந்து இதுவரை குழந்தைகள் உள்ளிட்ட 166 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இலங்கையில் இரண்டாவது பெரிய மனிதப் புதைகுழியாக செம்மணி பதிவாகியுள்ளது.

இலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிகப் பெரிய மனிதப் புதைகுழி மன்னாரில் உள்ள சதொச மனித புதைகுழியாகும். அங்கு 28 சிறுவர்களின் எலும்புகள் உட்பட 376 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டன.

2013 ஆம் ஆண்டில் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட மூன்றாவது பெரிய புதைகுழியாகக் கருதப்படும் மாத்தளை வைத்தியசாலைக்கு அருகிலுள்ள ஒரு இடத்திலிருந்து 155 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன.

இலங்கையில் நான்காவது பெரிய மனித புதைகுழியான கொழும்பு துறைமுக மனிதப் புதைகுழியிலிருந்து குறைந்தது 88 பேரின் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளதோடு அதன் அகழ்வுப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

ஐந்தாவது பெரிய புதைகுழி மன்னாரில் உள்ள திருக்கேதீஸ்வரம் புதைகுழியாகும். அங்கு 2013 இல் 82 மனித உடல்களின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வாய்வுப் பணிகள் நிறைவடைந்த நேரத்தில் 52 நபர்களின் எச்சங்கள் மீட்கப்பட்டிருந்தன.

(ம-7,33)






## ரணிலுக்குப் ...

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அரச நிதியைத் தவறாகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் கடந்த 22 ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

ரணிலுக்கு எதிரான வழக்கு நேற்று பிற்பகல் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த வழக்கு கொழும்பு கோட்டை நீதவான் திருமதி நிலுபுலி லங்காபுர முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது குற்றப் புலனாய்வுப் பிரிவில் இருந்து சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் ஆஜரானார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவரும் ரணில் விக்கிரமசிங்க நேற்றைய வழக்கு விசாரணைக்கு நேரில் ஆஜராகவில்லை. அவர் சூம் காணொளி தொழில் நுட்பம் மூலம் ஆஜரானார்.

ஆரம்பத்தில் ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பிணை வழங்க சட்டமா அதிபர் திணைக்களம் எதிர்ப்பை வெளியிட்டிருந்தது. பின்னர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நோய் நிலைமை அதிகரித்துள்ளதால் உயிராபத்து ஏற்பட்டுள்ளது எனவும் எனவே அவரைப் பிணையில் விடுவிக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி சட்டத்தரணி அனுஜ பிரேமரத்ன நீதி மன்றத்தில் கோரிக்கையை முன் வைத்த நிலையில் நீதிமன்றம் ரணில் விக்கிரமசிங்கவின் நோய் நிலைமையைக் கருத்தில்கொண்டு அவரைப் பிணையில் விடுவிக்க அனுமதி வழங்கியது.

அதன்படி, சந்தேகநபரைத் தலா ரூ. 5 மில்லியன் பெறுமதியான 3 சரீரப் பிணைகளில்செல்ல அனுமதிக்கப்பட்டார். வழக்கு விசாரணை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 29 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ம-7)

## காணவில்லை



மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பரமானந்தம் யோகேஸ்வரன் (வயது 75) என்பவரைக் கடந்த மூன்று தினங்களாகக் காணவில்லை.

மனநிலை பாதிக்கப்பட்ட இவரைக் கண்டவர்கள் தயவுசெய்து

**077 609 6399**

என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷர்களுக்கு எதிராகவும் விரைவில் நடவடிக்கை

## உறுதிபடத் தெரிவித்தார் பிமல்



**(கொழும்பு)**

**ரணிலின் வெளிநாட்டுப் பயணத்தின்போது அரச நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்டமை நிரூபணமாகியுள்ளதன் பிரகாரமே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ரணில் விக்கிரமசிங்கவிற்கு மாத்திரமல்ல, விரைவில் ராஜபக்சக்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்த அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.


அரச உத்தியோகத்தர்களுக்கு உரித்தான சட்டமே ஜனாதிபதிகளுக்கும் உரித்தாகும், அவர்களுக்குப் பிரத்தியேகமான சட்டம் இல்லை, அதன் பிரகாரமே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் மத்திய வங்கியில் இடம்பெற்ற மோசடி தொடர்பாக விரைவில் விசாரணை நடத்தப்படும் என்றும் அலோசியஸிடம் பணம்பெற்றவர்கள் குறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

மக்கள்வழங்கியுள்ள ஆணையில் இது முக்கியமான விடயமாகும் எனக் குறிப்பிட்ட பிமல் அதனை நிறைவேற்றுவோம் எனவும் தெரிவித்தார். (நி)

# 2025 இல் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்கள் இந்த வருட இறுதிக்குள் நிறைவடைய வேண்டும்

## ஜனாதிபதி பணிப்புரை



(கொழும்பு)

2025ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்கள் இந்த ஆண்டிலேயே நிறைவடைய வேண்டும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி தலைமையில் நேற்று நடைபெற்ற நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான கலந்துரையாடலின் போதே அவர் இதை தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலின் போது, கடந்த கால பொருளாதார நெருக்கடி காரணமாக நிறுத்தப்பட்ட திட்டங்களை மீண்டும் தொடங்குதல், நடைபெற்று வரும் பணிகளில் எழுந்துள்ள சிக்கல்கள் உள்ளிட்டவை விவாதிக்கப்பட்டன.

இதன்போது, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மீள்குடியேற்றம் மற்றும் வீட்டுத் திட்டங்களை இந்த ஆண்டிற்குள் நிறைவு செய்ய முடியும் என அமைச்சின் அதிகாரிகள் ஜனாதிபதியிடம் உறுதியளித்தனர்.

அரசாங்கம் தேவையான நிதியை ஒதுக்கியிருந்தாலும், குறிப்பிட்ட காலத்திற்குள் பயன்படுத்தப்படாதது பிரச்சினையாக உள்ளது என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். மேலும், வீடுகள் மற்றும் நகர்ப்புற கட்டடங்களை அமைக்கும் போது அந்தப் பகுதி மக்களின் தேவைகள் மற்றும் கருத்துகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

முந்தைய ஆட்சியின்போது மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் பல இடங்களில் பயன்பாடில்லாத கட்டடங்களாக மாறியுள்ளதையும், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தொடங்கப்பட்ட 18 பாலம் நிர்மாணத் திட்டங்கள் பாதியிலேயே கைவிடப்பட்டதால் அப்பகுதி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். இதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

அத்துடன், சீன மற்றும் இந்திய கடன் உதவியுடன் மேற்கொள்ளப்படும் வீட்டுத் திட்டங்கள், காணி கையகப்படுத்தலின் சட்ட சிக்கல்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டு, அவற்றிற்கான தீர்வுகளை முன்மொழியுமாறு ஜனாதிபதி பணித்தார்.

இதேவேளை, அரசு வீட்டுத் திட்டங்களில் இதுவரை பயனடையாத மக்களுக்கு, கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தின் ஆதரவுடன் புதிய முறைகள் கொண்டு வரப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர். (நி)

# தேங்காய் விலை மீண்டும் அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் தேங்காய் விலை மீண்டும் அதிகரித்துள்ளதாக நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

சில பிரதேசங்களில் தேங்காய் ஒன்று 180 ரூபாய் முதல் 200 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன் சிறிய தேங்காய் ஒன்று 150 முதல் 180 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

நாட்டில் தென்னை அறுவடையை விருத்தி செய்ய நாடே சுபீட்சம் ஆக்கும் விருட்சம் என்ற தொலைநோக்கு கருப்பொருளின் கீழ் வடக்கு தென்னை முக்கோணம் எனும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் பருத்தித்துறை, சிலாவத்துறை, மற்றும் கொக்கிளாய் ஆகிய மூன்று நகரங்களை இணைத்து யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், மற்றும் வவுனியா ஆகிய 5 மாவட்டங்களையும் உள்ளடக்கி செயற்படுத்தப்படும். (நி)


மணிவிழாவும் சேவைநலன் பாராட்டும்

செல்வி
ரஜனி கதிரவேலு
(Spe.Trd.Home Economics SLTS-I)



யா/வல்லை மகளிர் மகா வித்தியாலயத்தில் அளப்பரிய சேவையாற்றி 26.08.2025 (செவ்வாய்க்கிழமை) நேற்றையதினம் ஓய்வுபெற்ற ஆசிரியை செல்வி.ரஜனி கதிரவேலு அவர்கள் தமது ஓய்வுக்காலத்தில் சகலநலன்களுடனும் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம்.

அன்பின் உறைவிடமாய்
அர்ப்பணிப்புள்ள ஆசானாய்
கடமையில் கண்ணியமாய் எம்
பள்ளியில் பணியாற்றிய வித்தகியே
முப்பத்து மூன்று வருட ஓயாத சேவையில்
ஓய்வு பெறும் நீர் சீரோடும் சிறப்போடும் வாழ்க!

சேவை விபரம்

1. யா/கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலை 01.09.1992 - 09.05.2010
2. யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி 10.05.2010 - 20.01.2019 (2015 ஆசிரியர் பிரதீபா பிரபா விருது கிடைக்கப்பெற்றது)
3. யா/தொண்டைமானாறு வீரகத்தி மகாவித்தியாலயம் 21.01.2019 - 31.12.2019
4. யா/வல்லை மகளிர் மகா வித்தியாலயம் 01.01.2020 - 26.08.2025 பயிற்றப்பட்ட மனைப்பொருளியல்

Best Wishes!

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/வல்லை மகளிர் மகா வித்தியாலயம்

(5143)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபாலிங்கம் ஞாபகார்த்த தொடர்; சம்பியனானது யாழ். மத்தி



முன்னாள் அதிபர் ஞாபகார்த்தமாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மற்றும் யாழ்பாணம் இந்துக் கல்லூரி அணிகளுக்கிடையிலான மூன்றாவது ரி-20 கிரிக்கெட் தொடர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ். மத்திய கல்லூரி அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 194 ஓட்டங்களை குவித்தது. யாழ். மத்திய கல்லூரி அணி சார்பில் அதிக பட்சமாக நியூட்டன் 83 ஓட்டங்களையும் அமலன் 37 ஓட்டங்களையும் வேணுஜன் 22 ஓட்டங்களையும் மற்றும் நிதர்சன் 12 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

தொடர்ந்து 195 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக் கல்லூரி அணி 14.1 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 41 ஓட்டங்களை மாத்திரமே பெற்றனர்.

யாழ். மத்திய கல்லூரி அணி சார்பில் நிதர்சன் 3 விக்கெட்டுக்களையும், ஜேனோசன் 3 விக்கெட்களையும் அக்சயன் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தியிருந்தனர். இதனடிப்படையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 153 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி வாகை சூடியது. (3)

# வலைப்பந்தாட்ட போட்டியில் சம்பியனானது பொம்மேர்ஸ்

**யாழ் மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தின் அனுமதியுடன் வடமராட்சி அல்வாய் நக்கீரன் சன சமூக நிலையத்தின் 77 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நக்கீரன் விளையாட்டுக் கழகம் நடத்திய வட மராட்சிக்கு உட்பட்ட கழகங்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்ட போட்டியில் வதிரி பொம்மேர்ஸ் அணி தமது அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.**

இதன் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நக்கீரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடை பெற்றது. இறுதியாட்டத்தில் வதிரி பொம்மேர்ஸ் அணியை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கியம் பி அணி மோதியது. நான்கு கால் பகுதிகளாக நடைபெற்ற ஆட்டத்தில் முதல் கால் பகுதி ஆட்டத்தில் பருத்தித்துறை ஐக்கியம் பி அணியினர் ஆதிக்கம் செலுத்தி 5:2 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் முன்னிலை வகித்தனர்.

ஆனால் அடுத்த மூன்று கால்பகுதி ஆட்டங்களிலும் வதிரி பொம்மேர்ஸ் அணி ஆதிக்கத்தை வெளிப்படுத்தி ஆட்ட நேர முடிவில் வதிரி பொம்மேர்ஸ் அணி 26:14 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர்.

இதில் சிறந்த விளையாட்டு வீராங்கனையாக வதிரி பொம்மேர்ஸ் அணியை சேர்ந்த வி.தாரிகா, தொடர் ஆட்ட நாயகியாக பொம்மேர்ஸ் அணியை சேர்ந்த எம்.ஆரணியா, சிறந்த பேற்றுக்கெய்யும் வீராங்கனையாக பருத்தித்துறை ஐக்கியம் பி அணியை சேர்ந்த மேரி அனுஷ்கா, சிறந்த பேற்றுத் தடுப்பு வீராங்கனையாக பருத்தித்துறை ஐக்கியம் பி அணியை பிரதி நிதித்துவம் செய்த கம்ஷிகா, வளர்ந்து வரும் வீராங்கனையாக திக்கம் இளைஞர் அணியைச் சேர்ந்த மரீனா, நன்னடத்தை அணியாக கலைமகள் பி அணியும் தெரிவு செய்யப்பட்டனர். (3-90)




# அவுஸ்திரேலியாவிற்கு எதிராக சாதனை படைத்த தென்னாபிரிக்கா



தென் ஆபிரிக்க கிரிக் கெட் அணி அவுஸ்திரே லியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடியது.

இதில் கெய்ன்சில் நடந்த முதலாவது ஆட்டத்தில் 98 ஓட்டங்கள் வித்தியாசத்திலும், மெக்காயில் நடந்த 2 ஆவது ஆட்டத்தில் 84 ஓட்டங்கள் வித்தியாசத்திலும் தென் ஆபிரிக்கா வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றியது.

இதனையடுத்து இவ் விரு அணிகள் இடையிலான 3 ஆவது மற்றும் கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டி மெக்காய் நகரில் நேற்று முன்தினம் நடை பெற்றது.

இதில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ் திரேலிய அணி 50 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து 431 ஓட்டங்கள் குவித்தது.

பின்னர் 432 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்கை நோக்கி களமிறங்கிய தென் ஆபி ரிக்க அணி வெறும் 24.5 ஓவர்கள் மட்டுமே தாக்குப்பிடித்த நிலையில் 155 ரன்களில் ஓல் அவுட் ஆனது. இதன் மூலம் 276 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா அபார வெற்றி பெற்றது.

இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை தென் ஆபிரிக்கா 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரை தென் ஆபிரிக்கா கைப்பற்றுவது இது 9 ஆவது முறையாகும். இதன் மூலம் ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக அதிக தொடர்களை வென்ற அணி என்ற மாபெரும் சாதனையை தென் ஆபிரிக்கா படைத்துள்ளது. இதில் இங்கிலாந்து 8 வெற்றிகளுடன் 2 ஆவது இடத்திலும் இந்தியா 6 வெற்றிகளுடன் 3 ஆவது இடத்திலும் உள்ளது. (3)



சமுர்த்தியின் மூன்று தசாப்த கால நினைவுகளுடன் "சமூக வலிமை நிறைந்த நாடு" எனும் தொனிப்பொருளில் மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப்போட்டி அண்மையில் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. பச்சிலைப்பள்ளி, பூநகரி, கரைச்சி, கண்டாவளை ஆகிய பிரதேச செயலக அணிகள் கலந்து கொண்ட இப் போட்டியில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக அணி சம்பியன் பட்டத்தை வென்றது.



வடமாகாண பாடசாலைகளுக்கிடையே துரையப்பா விளையாட்டரங்கில் அண்மையில் நடைபெற்ற தடகளப் போட்டியில் யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவர்கள் 5 தங்கம், 4 வெள்ளி மற்றும் 3 வெண்கலப் பதக்கங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INVITATION FOR BIDS (IFB)
# IFB No: 2025/06
# VELANAI PRADESHIYA SABHA,
## VANGALAVADY JUNCTION, VELANAI.

1. The **Chairman, Divisional Procurement Committee,** on behalf of the Velanai Pradeshiya Sabha Invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below. **"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 for the contracts exceed Rs.5 million,"**
4. Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document.** Additional details are provided in Schedule (Section 5) for SBD 3 Documents
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days from **2025-08-27 To 2025-09-09** during **09:00 hrs and 15:00 hrs.**
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman / Secretary, Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai. (T.P No: 021 221 1506, Fax No: 021 221 1506) **from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman/Secretary, Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai.**on or before 10.30 a.m as stated in table below.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall,** Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai. commencing at **11.00 A.M as stated in table below.**
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | | | From 2025-08-27 To 2025-09-09 | | | | |
| | Pre-Bid Conference | | | At 11.00 A.M on 2025-09-02 | | | | |
| | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 2025-09-10 | | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| NP/ 14/41 (18)/ 02/ Tourism /02/ 2025 | Modernization Of the Public Toilet System near Kurikadduwan beach | 4.700 | 84 | C8 or above in Building Construction | 1,500.00 | 47,000.00 | 26-11-2025 | 29-10-2025 |

Chairman,
Divisional Procurement Committee (DPC)
Velanai Pradeshiya Sabha,
Vangalavady junction, Velanai

27.08.2025

(C-3741)

# ஆவணிச் சதுர்த்தி பெருவிழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய ஆவணிச் சதுர்த்தி பெருவிழா இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 6.15 மணிக்கு 1008 சங்காபிஷேகம், பஞ்சமுக பிள் ளையார் அர்ச்சனை, தீபாரா தனைகள் நடைபெறும். மாலை 5 மணிக்கு மூலஸ்தான பூசை யுடன் பெருவிழா ஆரம்பமாகும். தொடர்ந்து 6.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடை பெற்று சுவாமி உள்வீதி, வெளி வீதி வலம் வருவார்.

இதேவேளை, மாலை 5.30 மணிக்கு ஆலய உள் மண்டபத்தில் சைவசமய அறிவு சார் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான சான் றிதழும் பரிசில்களும் வழங் கப்படும். விசேட நிகழ்வாக ஆலய அறநெறி பாடசாலை மாண வர்களின் வயலின், வீணை இசை நிகழ்வும் நடைபெறும் என ஆலய நிர்வதகத்தினர் அறிவித்துள்ளனர். (3)

# பசுமாட்டைப் படுகொலை செய்த படுபாவிகள்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காரைநகர் பகுதியில் குடும்பம் ஒன்றின் வாழ்வாதாரமாக இருந்த பசுமாடு ஒன்று, சட்டவிரோத செயல்களில் ஈடுபடும் கும்பலால் படு கொலை செய்யப்பட்டுள்ளது. காரை நகரைச் சேர்ந்த யோகநாதன் என்ப வருக்கு சொந்தமான சுமார் ஒரு லட்சம் ரூபாய் பெறுமதியான பசுவே படுகொலை செய்யப்பட்டுள்ளது.பசு படு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் உரிமையாள ரினால், ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ள னர்.அதேவேளை மாடுகளைக் களவாடி இறைச்சியாக்கும் சட்டவிரோதக் கும்பல் பசுமாட்டைத் தடம் வைத்து பிடிக்க முற்பட்ட வேளையில் மாடு உயிரிழந்த நிலையில், மாட்டின் உடலத்தை சம்பவ இடத்தில் இருந்து அகற்ற முடியாத நிலை யில் மாட் டினை கைவிட்டு சென்றிருக் கலாம் என அப்பகுதி மக்கள் தெரிவித் துள்ளனர்.

தீவகப் பகுதிகளில் வாழ்வாதாரத்திற் காக வளர்க்கப்படும் கால்நடைகள் சட்ட விரோத செயல்களில் ஈடுபடும் கும்பல்களி னால் தொடர்ந்து களவாடப்பட்டு அவை இறைச் சியாக்கி விற்பனை செய்யப்படுகின்றன.

அதனால் அப்பகுதி மக்கள் தமது வாழ்வாதாரத்தை இழந்து வருவதால், அவற்றைக் கட்டுப்பட்டுத்த நடவடிக் கைகள் எடுக்க வேண்டும் என கோரி க்கை விடுக்கப்பட்டுள்ளது. (8-33)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
20 - 10 - 1935



விண்ணில்
06 - 09 - 2024

அமரர். திருமதி
**சுந்தரம் நாகம்மா**

பரந்த வானொத்த உன் அன்பினிலே திரண்ட மேகங்களாய்
மகிழ்வோடு நாம் தவழ்ந்திருந்த வேளையிலே.
யாரிடமும் சொல்லாது வேறிடம் சென்று இன்று ஆண்டொன்று
ஆகியதோ ஆண்டுகள் பலவானாலும் நீர் திரும்பி வருவீரென உங்கள்
அன்பிற்காய் கண்ணீருடன் காத்திருக்கும்.........
பிள்ளைகள், மருமக்கள்,பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள். (1477)

தகவல்
மகள் சறோஜினிதேவி (சறோ) குடும்பத்தினர்
மகன் சற்குணதாஸ் (ராசன்) குடும்பத்தினர்
077 469 1643

பைங்கூரன், கம்பர்மலை, உடுப்பிட்டி

# மணவாளக்கோல பெருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வடமராட்சி அல் வாய் வடக்கு திருவருள்மிகு குருக் கட்டு அரசடி விநாயகர் தேவஸ்தான வருடாந்த மணவாளக்கோல பெரு விழா நாளை வியாழக்கிழமை பூர்வபட்ச பஞ்சமித் திதியும் சுவாதி நட்சத்திரமும் சித்தாமிர்த யோகமும் கூடிய காலை 9.13 மணி முதல் 11.12 மணி வரையுள்ள சுப முகூர்த்த வேளையில் விநாயகருக்கும் பரிகார மூர்த்திகளுக்கும் 1008 சங்கா பிஷேகம் நடைபெறவுள்ளதென ஆலய பரிபாலன சபையினர் அறி வித்துள்ள னர். (3)

# திருமுறைத் திருவிழா

(யாழ்ப்பாணம்)


தெல்லிப்பழைஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் மூன்றாம் நாள் மாலை, திருமுறைத் திருவிழா இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகவுள் ளது.

துர்க்கை அம்பாளுடன் நால்வர் திருவுருவங்களின் வீதியுலா இடம்பெறவுள்ளது.

அத்துடன் பன்னிரு திருமுறைப் பாடல்கள் இசை வித்தகர்களால் சமர்ப்பிக்கப்படவுள்ளமை குறிப் பிடத்தக்கது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்கினங்கள் தீர்க்கும் விநாயகர் சதுர்த்தி இன்று



விநாயகர் சதுர்த்தி என்பது விநாயகரைப் போற்றி, கொண்டாடி வழிபடும் ஒரு அற்புதமான நாளாகும். இந்த நாளில் விநாயகரை நம்முடைய வீட்டில் எழுந்தருளச் செய்து, அவரது மனம் மகிழும் படி பூஜைகள் செய்து வழிபட்டு, வேண்டிய வரங்களையும், ஆசிகளையும் பெறும் நன்னாள் ஆகும். இந்த நாளில் விநாயகரை வழிபட்டால் அடுத்து வரும் ஓராண்டிற்கு விநாயகர் அருளால் அனைத்தும் வெற்றிகரமாகச் சிறப்பானதாக நடைபெறும் என்பது ஐதீகம்.

தடைகளை அகற்றி, ஞானத்தையும் செல்வ வளத்தையும் வழங்கக் கூடியவர் விநாயகப் பெருமான். அவர் அவதரித்த ஆவணி மாத வளர்பிறை சதுர்த்தி நாளை விநாயகர் சதுர்த்தியாக ஆண்டுதோறும் நாம் கொண்டாடுகிறோம்.

சதுர்த்தி என்பது திதிகளில் நான்காவது திதியாக வருவது. அதனால் சதுர்த்தி திதியை அடிப்படையாக வைத்தே விநாயகர் சதுர்த்தி கொண்டாடப்படுகிறது.

பொதுவாக எந்த ஒரு காரியத்தை தொடங்குவதற்கு முன்பும் விநாயகரை வழிபட்டுவிட்டுத் தான் தொடங்குவது இந்துக்களின் வழக்கம். இதனால் விநாயகரின் அருளால் அந்தக் காரியத்தில் வெற்றி, லாபம் ஆகியவை கிடைக்கும் என்பது நம்பிக்கை.

அதுவும் விநாயகர் அவதரித்த விநாயகர் சதுர்த்தி நாளில் அவரை மனதார வழிபட்டால் வளர்ச்சி, புதிய தொடக்கம் ஆகியவை ஏற்படுவதுடன், வாழ்க்கையில் இருக்கும் பிரச்சினைகள், துன்பங்கள், சவால்கள், சிக்கல்கள் ஆகியவற்றில் இருந்து விடுபட முடியும் என்று நம்பப்படுகிறது. இதனால் விநாயகர் சதுர்த்தி, அனைத்து தரப்பினராலும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுவது வழக்கமாக உள்ளது.

இன்று காலை 11 மணி முதல் பகல் 01.40 வரை எந்த நேரத்தில் வேண்டுமானாலும் விநாயகர் சதுர்த்தி வழிபாட்டினை செய்யலாம். இதுவே விநாயகர் சதுர்த்தி வழிபாட்டிற்கான சுப முகூர்த்த நேரமாக குறிப்பிடப்படுகிறது. இன்றைய தினம் மாலையில் சதுர்த்தி திதி இருக்காது என்பதால் காலை முதல் பகல் வரையிலான நேரத்திற்குள் விநாயகர் சதுர்த்தி வழிபாட்டினை நிறைவு செய்து கொள்வது நல்லது.

**பிள்ளையாரின் அவதாரம்**

ஒருமுறை சிவபிரான் வெளியே சென்றிருந்த சமயம் பார்வதிதேவி நீராடச் செல்வதற்கு எண்ணினார். அப்போது தனக்குக் காவல்காக்க ஒருவரும் இல்லையென்பதால், தனது நீராட்டுக்காக வைக்கப்பட்டிருந்த சந்தனக் குழம்பை எடுத்து ஒரு உருவம் சமைத்துத் தமது அனுக்கிரகத்தால் அதற்கு உயிரூட்டினார். அவரால் உயிரூட்டப்பட்டதால் அவ்வுருவம் அவரது பிள்ளை ஆகிவிட்டது. எவரையும் உள்ளே நுழைவதற்கு அனுமதிக்கக் கூடாதெனப் பிள்ளையாருக்கு அறிவுறுத்திவிட்டு பார்வதி தேவியார் நீராடச் சென்றுவிட்டார்.

அச் சமயத்தில் மீண்டுவந்த சிவபிரானைப் பிள்ளையார் உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை. அதனால் சினங்கொண்ட சிவபிரான் பிள்ளையாரின் சிரத்தை அரிந்துவிட்டு உள்ளே சென்றுவிட்டார். நீராடி முடிந்ததும் தேவியார் வெளியே வந்து, பிள்ளையார் சிரச்சேதமுற்றுக் கிடந்த கோலத்தைக் கண்டு சீற்றங் கொண்டார். தான் உருவாக்கிய பிள்ளையாரைச் சிவனே சிதைத்து விட்டதை அறிந்த அவர் ஆவேசங் கொண்டவராக காளியாக உருக் கொண்டு வெளியேறி மூவுலகிலும் தமது கண்ணில் பட்ட சகலவற்றையும் அழிக்கத் தொடங்கினார்.

காளியின் ஆவேச நர்த்தனத்தைக் கண்டு அஞ்சிய தேவர்கள் சிவபிரானிடம் சென்று முறையிட்டனர். காளியைச் சாந்தப்படுத்துவதற்கு சிவன் எண்ணி, தனது கணங்களை அழைத்து 'வடதிசையாகச் சென்று முதலில் தென்படுகின்ற ஜீவராசியின் தலையைக் கொய்து வருமாறு பணித்தார். பணிப்பின் பிரகாரம் கணங்கள் வடதிசை நோக்கிச் சென்ற பொழுது அவர்களுக்கு ஒரு யானையே முதலில் தென்பட்டது.

அவர்கள் அதன் தலையைக் கொய்து சென்று இறைவனிடம் கொடுக்கவும், அவர் அத்தலையை வெட்டுண்டு கிடந்த பார்வதியின் பிள்ளையாரின் முண்டத்தில் வைத்து உயிரூட்டிவிட்டார். இதைக் கண்டு சாந்தமடைந்த தேவியார் அகமகிழ்ந்து பிள்ளையாரைக் கட்டி அணைத்துக்கொண்டார்.இது நடந் தது ஆவணி மாதத்து சுக்கில பட்ஷ சதுர்த்தியன்றாகும். அன்றிலிருந்து அந்தத் தினம் இந்து மதத்தின் உயர்வான ஒரு புனித தினமாக ஆகிவிட்டது.

## சிவகுரு ஆதீனத்தில் சிறுவர்களுக்கான வகுப்பு

(யாழ்ப்பாணம்)

சிவகுரு ஆதீனத்தில் சிறுவர்களுக்கான வகுப்புக்கள் மற்றும் இளையோருக்கான சந்திப்பு என்பன எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மீள ஆரம்பமாகவுள்ளது.

15 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கான வகுப்பு காலை 9 மணி முதல் 11 மணி வரை சிவகுரு ஆதீனத்தில் இடம்பெறவுள்ளதுடன் தொடர்ந்து மாலை 3 மணிமுதல் 4 மணிவரை 16 வயது தொடக்கம் 30 வயதுவரையான இளையோருக்கான சந்திப்பும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

## ஸ்ரீ கற்பக விநாயகரின் அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய அலங்கார உற்சவமானது விநாயகர் சதுர்த்தி நன்னாளான புதன் கிழமை பக்திபூர்வமாக ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 15 தினங்கள் இடம்பெறவுள்ள அலங்கார உற்சவந்தனில் இரவு 7 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் 7.30 மணிக்கு உள்வீதி உற்சவமும் இடம் பெறவுள்ளன. (ம-7)

## வீட்டுத்தோட்டம் விவசாயப் பாடம் கற்கும் மாணவர்களுக்கானது என்ற மனோநிலை மாறவேண்டும்

### ஐங்கரநேசன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பாடசாலைத் தோட்டமோ அல்லது வீட்டுத்தோட்டமோ எல்லா மாணவர்களும் பங்கேற்க வேண்டும். இவை விவசாயப் பாடம் கற்கின்ற மாணவர்களுக்கானது என்ற மனோநிலை மாறவேண்டும் என தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்திக் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

மாணவர்களிடையே வீட்டுத்தோட்டச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் மாணாக்க உழவர் என்ற வீட்டுத்தோட்டப் போட்டியை நடத்தி வருகின்றது. இதற்கான விதைகளையும், நாற்றுகளையும் வழங்கி வைக்கும் நிகழ்ச்சி கடந்த 24 ஆம் திகதி நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், பெரும்பாலான பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வி பாதித்துவிடும் எனக் கருதிக் கற்றலுக்குப் புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிப்பதில்லை. பாடப் புத்தகங்கள் தவிர வேறு புத் தகங்கள் வாசிப்பதற்குக்கூட விடுவதில்லை. இவற்றால் பரீட்சைப் பெறுபேறுகள் குறைந்து விடும் என்று அவர்கள் நம்புகிறார்கள். இது தவறான நம்பிக்கை. பாடசாலைகளில் கூடுதலான புள்ளிகளைப் பெறுபவர்களும், உயர் சித்திகளைப் பெற்று முன்னணியில் நிற்பவர்களும் பாடங்களில் மாத்திரம் கவனம் செலுத்துகின்ற புத்தகப் பூச்சிகள் அல்லர். இவர்கள் கற்றலுக்குப் புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுமாகவே உள்ளார்கள்.

வீட்டுத்தோட்டங்கள் தேவையான மரக்கறி வகைகளைக் குறைந்த செலவில் தருவனவோ அல்லது நஞ்சற்ற உணவைத் தருவனவோ மாத்திரம் அல்ல. விதைகளில் முளை விடுவது தொடங்கி, அவை நாற்றாக நிமிர்ந்து, செடி கொடியாக உயர்ந்து பூத்துக் காய்க்கின்ற ஒவ்வொரு பருவமும் அவற்றை அவதானிக்கும் மாணவர்களின் மனோ நிலையில் ஆரோக்கியமான மாற்றங்களை உண்டுபண்ணுகின்றன.

வீட்டுத் தோட்டங்கள் மாணவர்களுக்கு உளவியல் ரீதியான ஒத்தடங்களைத் தருகின்றன என்பதைப் பெற்றோர்கள் புரிந்து கொண்டு அவர்களை வீட்டுத் தோட்டச் செய்கையில் ஈடுபட அனுமதிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (8)

## குருநகர் புனித ஆரோக்கிய நாதர் கோவில் தேர் இன்று


### தேர் ஏறும் எங்கள் திருநாதர்

தேர் ஏறி வரும் எங்கள் திருநாதர்
ஆரோக்கிய நாதர்
ஆவணியில் தேர் ஏறும் அருள்நாதர்
பூரிப்பாய் நாம் மகிழ்ந்து புகழ்ந்தவரைப்
பாடிடுவோம்
குற்றம் குறை அகற்றிடுவோம் எங்கள்
குறை நீங்க வணங்கிடுவோம்
அயலவர்கள் ஒன்றுகூடி ஆரோக்கிய நாதர்
தேர் வடம் பிடிப்போம்
நாட்டில் துயர் நீங்கட்டும்
நம்மவர் குறை அகலட்டும்
நல்லதோர் விடியல் நாட்டில் மலரட்டும்
குருநகர் மக்களெல்லாம் குதூகலம் அடையட்டும்
போதை வஸ்தும் கஞ்சாவும் புகைப்பனவும்
போய் அகலப் பிரார்த்திப்போம்
நல்ல தொரு விடியல் நாளை நாட்டில் மலரட்டும்.

**க.திருவம்பலம்**
**(நெய்தல் நிலமகன்)**
**கென் றோக்ஸ் சனசமூக நிலையம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்கொல்லிப் பூச்சிகளில் நுளம்புக்கு தனியிடம்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**


உலக நுளம்புகள் தினம் ஓகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி கொண்டாடப்பட்டுள்ளது. நுளம்புகளுக்காக உலகளாவிய தினமா என நீங்கள் முணுமுணுப்பதும் தெரிகின்றது. என்ன செய்வது எமது கவனயீனத்தால் எமது சோம்பேறித்தனத்தால் நுளம்புகளை நாமே பெருக்கிவிட்டு அதனால் நோய்கள் கடத்தப்பட்டு எம்மையே அழித்துக் கொள்கின்றோமே. அந்த அலட்சியத்தை அசட்டையீனத்தினை நாம் செய்வதை தடுக்கும் செயற்பாடாக அனைவருக்கும் அவற்றின் விளைவுகளை விளக்கும் முன்முயற்சியாக இத்தினம் கொண்டாடப்பட்டது. மனிதனைக் கொல்லும் நோய்களைக் காவும் முக்கியமான பூச்சியினமாக நுளம்புகள் கருதப்படுகின்றன.

எமது அலட்சியத்தால் எம்மை அறியாமலேயே நுளம்புகளை எமது சூழலில் பெருக்கிவிட்டிருக்கின்றோம். நுளம்புகள் வெறுமனே கடித்து எமது இரத்தத்தை உறுஞ்சுவதுடன் உறுஞ்சும்போது வைரசு கிருமிகளை எமதுடலில் உட்புகுத்தி விடுகின்றன. ஆண்டாண்டு காலமாக நுளம்புகளை இனங்காணுவதிலும் அதனை கட்டுப்படுத்துவதிலும் ஆய்வுகள் பல மில்லியன் கணக்கிலான நிதியை உள்ளிழுத்து செய்யப்பட்ட போதிலும் இன்னமும் முறையான நுளம்புகளை கட்டுப்படுத்தும் செயல் வடிவம் அரங்கேறவில்லை எனலாம். இதற்கு காரணம் ஆய்வுகளல்ல அல்லது நுளம்புகளை கட்டுப்படுத்தும் முறைகளுமல்ல. அனைத்திற்கும் நாமே காரணமாவோம். ஒரு பக்கத்தில் நுளம்புகளை பெருகுவதற்கு வழிசெய்து கொடுத்துவிட்டு மறுபக்கத்தில் ஆய்வுகளையும் முடிவுகளையும் பெற்று எதுவும் ஆகப்போவதில்லை.

**நுளம்பினால் பரவும் நோய்கள்**

யானைக்கால்நோய் (Elephantiasis) எனப்படுவது நுளம்பினால் பரவப்படும் பிலாரியா புழுக்கள் வகையைச் சார்ந்த வட்டப்புழுக்களினால் ஆகும். இவற்றை தொற்று ஏற்படுத்திய நுளம்பு பரப்புகின்றது. பிளாஸ்மோடியம் வகை நுண்ணங்கியினால் மலேரியா தொற்று ஏற்படுத்தப்படுகின்றது. இதற்கு நுளம்பு பிளாஸமோடியம் நுண்ணங்கியை காவி மனிதனில் குருதியை உறுஞ்சும் போது பரப்புகின்றது. டெங்கு, சிக்குன்குனியா, சீக்கா (Zika) மற்றும் மஞ்சள் காய்ச்சல் ( Yellow fever) என்பன ஏனைய நுளம்பினால் காவப்படும் வைரசு நோய்களாகும். ஏடஸ், ஜிப்ரி (Aedes aegypti) மற்றும் ஏடஸ் அல்போபிக்ரஸ் (Aedes albopictus) ஆகிய நுளம்புகள் இவற்றைக் காவுகின்றன.

**இனியொரு பசுமைப்புரட்சிக்கு...**



**ஈருடகவாழ்க்கையின் வலிமை**

நுளம்பினைக் கட்டுப்படுத்துவதிலுள்ள சிக்கல் என்னவெனில் அதனது ஈருடக வாழ்க்கைத் திறனாகும். எம்மவர்கள் இரட்டை விசா எடுப்பது போல நுளம்புகள் நிலத்திலும் நீரிலும் வாழும் தன்மையுடையன. நீரில் அதனது குடம்பி மற்றும் கூட்டுப்புழு பருவங்கள் வாழ்வதனால் அவற்றை அழிப்பது இலகுவான காரியமல்ல. தரையில் நுளம்புகள் பறந்து திரிவதனால் அவற்றினால் இலகுவில் பரவ ஏதுவாகி விடுகின்றது. பெண்நுளம்பு எம்மைக் குத்துவதனால் தமக்குத் தேவையான ஊட்டச்சத்தை எமது குருதியிலிருந்து பெற்றுக்கொள்கின்றன. ஆண்நுளம்பு எம்மைக் கடிக்காவிடினும் அது பூக்களில் உள்ள தேன்சுரப்பை உண்டு உயிர் வாழும். ஆணும் பெண்ணும் வெவ்வேறு உணவுப்பழக்கமிருப்பினும் பெண் நுளம்பினால் ஏற்படுத்தப்படும் தொற்று மிகவும் பாரதூரமானது. அதுவும் வைரசு தொற்று உயிரிழப்பிற்கும் காரணமாகிவிடுகின்றது. காய்ச்சல் வந்து அதனை கவனயீனமாக கொண்டால் இறுதியில் உயிரிழப்புவரை சென்றுவிடும் என்பதனை கவனத்திற் கொள்ளல் வேண்டும். உடனடியாக மருத்துவரை அணுகி அவரது பரிந்துரைகளை கடைப்பிடித்தல் அவசியமானதாகும். இந்த விடயத்தில் அலட்சியம் ஆகாது.

**நுளம்புகள் பரவுவதற்கான காரணிகள்**

அதிலும் வீடுகளில் இருக்கும் பிளாஸ்ரிக்குகள் மற்றும் சிரட்ட இன்னும் பல கொள்கலன்கள் அநாதையாக விடப்பட்டிருப்பதனால் அவற்றில் மழைபெய்யும் போது நீர்தேங்கி நுளம்பு பெருக்கம் ஏற்பட ஏதுவாகிவிடுகின்றது. வீட்டுத்தோட்டம் இருக்கின்ற இடங்களில் தொட்டிகளில் நீர் தேங்கி வடிந்தோடாதிருந்தால் நுளம்பிற்கு முட்டையிட வாய்ப்புக் கிடைத்துவிடும். மழைக்காலங்களில் நீர் தேங்காது நாம் அவசியம் பார்த்துக் கொள்ளல் வேண்டும். நீர் தேங்கக்கூடிய இடங்களை துப்பரவு செய்து அவற்றில் நுளம்பு பெருகாதவாறு வைத்திருத்தல் வேண்டும்.

**நுளம்புகளை தின்னும் தும்பியும் வௌவால்களும்**

நுளம்புகளின் இரைகௌவிகளாக தும்பியும் வௌவால்களும் இனங்காணப்பட்டுள்ளன. ஒரு தும்பி நாளொன்றுக்கு 100 நுளம்புகளை இரையாக்கக் கூடும் எனவும் வௌவால்கள் இன்னும் அதிகமாக நுளம்புகளை இரையாக்கும் தன்மையுடையது. இவையிரண்டினதும் பங்களிப்பு இருந்தால் நுளம்பின் எண்ணிக்கையை இலகுவில் கட்டுப்படுத்தினாலும் அவற்றின் இனப்பெருக்க வீதம் அதிகமென்பதால் நுளம்புகளை முற்றுமுழுதாக கட்டுப்படுத்துவது சாத்தியமில்லாமல் போகின்றது.


**நுளம்புகளை கட்டுப்படுத்தும் வகைகள்**

நுளம்புகளின் கடியிலிருந்து தப்பிக்க நுளம்பு வலைகள் பயன்படுத்தப்படுகின்றன. இன்னும் நுளம்புத் திரிகள் அல்லது கொசுவர்த்திகளும் அவற்றை விரட்டுவதற்கு பயன்படுத்தப்படுகின்றன. இவற்றை விட சிற்றனெல்லா எண்ணையை தடவுவதால் நுளம்பின் கடியிலிருந்து தப்பிக்கலாம். வீடுகளுக்கு நுளம்பு வலைகளை இடைவெளிகளுக்குள் அடிப்பதன் மூலம் அவை வீட்டுக்குள் உட்புகுவதை தடுக்கலாம். நுளம்புகளை கவர்ந்திழுக்கும் வெளிச்சப்பொறிகளை பயன்படுத்தலாம். இவ்வாறான முறைகள் பல இருந்தாலும் நாம் வெளிசென்று வரும்போது ஒரு நுளம்பு கடித்தாலும் அதிலிருந்து நோயுருவாகின்றதல்லவா. அதனால் அனைவரும் ஒன்றிணைந்து நுளம்பு பெருகாது எமது பிரதேசத்தை சுத்தமானதாக பேணுவது ஒவ்வொருவரினதும் கடமையாகின்றது. எமக்காகவும் ஏனையோருக்குமாக அனைவரினதும் சுகாதாரத்தை பேண நுளம்பு பெருகும் இடங்களை இல்லாதொழிப்போம். இது ஒரு சமூகமாக நாம் செய்தல் அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இந்தியப் பொருட்களுக்கான கூடுதல் வரி இன்று முதல் அமுல் ட்ரம்ப் அறிவிப்பு



(வோஷிங்டன்)
அமெரிக்க ஜனாதிபதி டொனால் ட்ரம்ப் முன்னர் அறிவித்தபடி, இன்று முதல் இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு கூடுதலாக 25% வரிவிதிப்பதாக அமெரிக்கா அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இதனால், ஏற்கனவே உள்ள 25% வரியுடன் சேர்த்து இந்தியப் பொருட்களுக்கு விதிக்கப்படும் மொத்த வரி 50% ஆக உயர்ந்துள்ளது. அமெரிக்கா சுங்க மற்றும் எல்லைப் பாதுகாப்புத் துறை மூலமாக இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இந்த புதிய வரி விதிப்பு, இன்று அதிகாலை 12:01 மணி முதல் அமுலுக்கு வரும் என அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கை, ரத்தினம், நகைகள், ஜவுளி, ஆடைகள், இறால் போன்ற இந்தியாவின் முக்கிய ஏற்றுமதித் துறைகளை கடுமையாகப் பாதிக்கும் என ரிசர்வ் வங்கி ஆளுநர் சஞ்சய் மல் ஹோத்ரா தெரிவித்தார்.

ரஷ்யாவிடம் எண்ணெய் கொள்வனவு செய்து உக்ரைன் போரை ஊக்குவிப்பதாக குற்றம்சாட்டி கடந்த ஒகஸ்ட் 6 ஆம் திகதி அன்று இந்திய பொருட்கள் மீது அபராதமாக 25 சதவீத வரியை அமெரிக்க ஜனாதிபதி டொனால் ட்ரம்ப் விதித் திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

## நான் விளையாட ஆரம்பித்தால் சீனா அழிந்து போகும்

### ட்ரம்ப் பகிரங்க மிரட்டல்

(வோஷிங்டன்)
அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், இந்தியா, சீனா, ஐரோப்பிய யூனியன் நாடுகள் உட்பட பல்வேறு உலக நாடுகள் மீது வரிகளை உயர்த்தி வருகிறார்.

குறிப்பாக அமெரிக்காவின் பிரதான போட்டியாளராக கருதப்படும் சீனா இந்த வரி உயர்வுகளுக்கு கடுமையான எதிர்வினை ஆற்றி வருகிறது.

இந்நிலையில் சீனாவுக்கு சீட்டாட்டத்தின் பாணியில் ட்ரம்ப் கடுமையான எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய ட்ரம்ப் "அவர்களிடம் சில கார்டுகள் உள்ளன. ஆனால் எங்களிடம் மிகச் சிறந்த கார்டுகள் உள்ளன.

நான் அவற்றை கொண்டு விளையாட விரும்பவில்லை. நான் அந்த கார்டுகளை வைத்து விளையாடினால், சீனா அழிந்து போகும். அதனால்தான் நான் இப்போது அதைச் செய்ய வில்லை" என்று தெரிவித்தார்.

அமெரிக்காவுக்கு அரிய மண் தாதுக்களின் விநியோகத்தை நிறுத்துவது போன்ற நடவடிக்கைகளை சீனா எடுத்தால் கடுமையான விளைவுகள் ஏற்படும் என்று ட்ரம்ப் எச்சரித்தார். அத்தகைய சூழ் நிலை ஏற்பட்டால் சீனா மீது 200 சதவீதம் வரை வரிகளை விதிக்கத் தயங்கமாட்டேன்

அதேநேரம், "இந்த ஆண்டு இறுதியில் அல்லது அதற்குப் பிறகு விரைவில் நான் சீனாவுக்குச் செல்வேன். இரு நாடுகளுக்கும் இடையே சிறந்த உறவுகள் இருக்கும்" என்று ட்ரம்ப் நம்பிக்கை தெரிவித்தார் (நி)

## பாகிஸ்தானில் பெருவெள்ளம் ஏற்படும் அபாயம்

### மனிதாபிமான அடிப்படையில் எச்சரித்த இந்தியா



(இஸ்லாமாபாத்)
பாகிஸ்தானில் கன மழை பெய்து வரும் சூழலில் சிந்து நதியின் கிளையான தவீ ஆற்றில் பெரிய அளவில் வெள்ளப் பெருக்கு ஏற்படும் அபாயம் இருப்பதாக மனிதாபிமான அடிப்படையில் அந் நாட்டுக்கு இந்தியா எச் சரிக்கையை விடுத்துள் ளது.

பாகிஸ்தான் ஊடக வட்டாரங்களின்படி, இஸ்லாமாபாத்தில் உள்ள இந்திய தூதரகம் பாகிஸ்தான் அரசாங்கத்திற்கு இது குறித்துத் தெரிவித்தது.

வழக்கமாக, சிந்து நதி நீர் ஒப்பந்தத்தின் கீழ் இரு நாடுகளின் ஆணையர் களிடையே இதுபோன்ற தகவல் பரிமாற்றம் நடைபெறும்.

இருப்பினும், பஹல்காமில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பிறகு இந்தியா இந்த ஒப்பந்தத்தை தற்காலிகமாக நிறுத்தி வைத்தது.

அப்போதிருந்து, ஒப்பந்தத்தின் கீழ் எந்தத் தகவல் பரிமாற்றமும் இல்லை. இந்தச் சூழலில் தூதரகம் மூலம் எச்சரிக்கைகள் அனுப்பப்படுவது இதுவே முதல் முறை. (நி)

## வியட்நாமைத் தாக்கிய 'கஜிகி'!

- மூவர் உயிரிழப்பு
- 7000 வீடுகள் சேதம்
- 35 விமானசேவைகள் ரத்து



(ஹனோய்)
வியட்நாமைத் தாக்கிய கஜிகி சூறாவளிக்கு 3 பேர் பலியாகி இருக்கின்றனர். அங்குள்ள விமான நிலையம் தற்காலிகமாக மூடப் பட்டுள்ளது.

சீனாவின் தெற்கே வெப்ப மண்டல புயல் கஜிகி, வியட் நாமை நோக்கி நகர்ந்து தற்போது தாக்கி உள்ளது. சூறாவளியாக மாறி காற்றுடன் கடும் மழையும் பெய்ய, நிலச்சரிவும் ஏற்பட்டது. இதில் 3 பேர் சிக்கி பலியாகி உள்ளனர். ஏராளமானோர் மாயமாகி இருக்கின்றனர்.

7000 வீடுகள், 28, 800 ஹெக்டேர் விளைநிலங்கள் நீரில் மூழ்கி உள்ளன. 18,000 மரங்கள் சாய்ந்துள்ளன. தன்ஹோா பகுதியில் மட்டும் 331 மின்கம்பங்கள் சரிந்துள்ளன.

தன்ஹோா, தாய் நுயுன் ... மின்சாரம் இல்லை.

மணிக்கு 130 கிமீ வேகத்தில் சுழன்றடித்த கஜிகி சூறாவளி ஹனோய் உள்ளிட்ட பல நகரங்களை கடுமையாக தாக்கியது. கிட்டத்தட்ட 44,000 பேர் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். 16,000 இராணுவ வீரர்கள் பாதுகாப்பு மற்றும் மீட்புப் பணிகளில் இறங்கி இருக்கின்றனர்.

இரண்டு உள்நாட்டு விமான நிலையங்கள் மூடப் பட்டு உள்ளன. 35 விமானங்களின் சேவை ரத்து செய்யப்பட்டு உள்ளன. வியட் நாமில் இருந்து சர்வதேச நாடுகளுக்குச் செல்லும் விமான சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டு உள் ளது.

இதுகுறித்து அந்நாட்டு தேசிய காலநிலை மையம் கூறியுள்ளதாவது வடக்கு வியட்நாமின் பல பகுதிகளில் பலத்த மழை பெய்யும் வாய்ப்பு உள்ளது. சில பகுதிகளில் 150 மிமீ அளவுக்கு மழை பதிவாகக்கூடும். பல பகுதி களில் வெள்ளம் மற்றும் நிலச் சரிவு ஏற்படும் அபாயம் உள்ளது. நிலைமை மிகவும் பாது காப்பற்ற, அபாயகரமான சூழலில் இருக்கிறது. வாகனங்களை யாரும் இயக்க வேண்டாம். மீன்பிடிக்கவோ, சுற்றுலா பகுதிகளை ரசிக்கவோ உகந்த சூழல் தற்போது இல்லை. இவ்வாறு வியட்நாம் காலநிலை மையம் தெரிவித் துள்ளது. (நி)

## ஜெலன்ஸ்கியை

(வோஷிங்டன்)
"உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியை ரஷ்ய ஜனாதிபதி புடின் சந்திக்கமாட்டார். ஏனெனில் அவருக்கு அவரைப் பிடிக்க வில்லை" என டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

உக்ரைன்- ரஷ்யா இடையே நடந்து வரும் போரை முடிவுக்குக் கொண்டு வர அமெரிக்க ஜனாதிபதி முயற்சி செய்து வருகிறார்.

அவர் ரஷ்ய ஜனாதிபதி புடினிடம் போர் நிறுத்தம் தொடர்பாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# சிறுவர்களின் மயானமாக மாறிவிட்டது காசா!

### போரை நிறுத்த குரல் கொடுக்குமாறு கடிதம் மூலம் வலியுறுத்து

(காசா)

**பல ஆண்டுகளாக தொடர்ந்துவரும் காசா போரை நிறுத்தப்படுவதற்காக குரல் கொடுக்குமாறு, துருக்கியின் முதல் பெண்மணியான எமின் எர்டோகன் அமெரிக்காவின் முதல் பெண்மணியான மெலனியா ட்ரம்புக்கு கடிதம் ஒன்றினூடாக வலியுறுத்தியுள்ளார்.**



அண்மையில் உக்ரைன் - ரஷ்ய போரை நிறுத்துமாறு கோரி, ரஷ்ய ஜனாதிபதி புட்டினுக்கு மெலனியா கடிதம் ஒன்றை எழுதியிருந்தார். அதில் போரினால் விளைந்த பாதிப்புகள், குறிப்பாக சிறுவர்களுக்கு நேர்ந்த கதியைச் சுட்டிக்காட்டி, யுத்தத்தை உடனடியாக நிறுத்துமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

மெலனியாவின் இந்த முயற்சியைப் பாராட்டும் வகையில், கடந்த சனிக்கிழமை துருக்கி ஜனாதிபதி மாளிகையின் ஊடாக எமின் எர்டோகனின் கடிதமொன்று வெளியிடப்பட்டது.

அதில், உக்ரைன் - ரஷ்ய போரை நிறுத்த மெலனியா எடுத்துக்கொண்ட முயற்சியை எமின் பாராட்டி எழுதியிருந்தார்.

அதேபோன்று பாலஸ்தீனத்தின் காசாவில் இடம்பெற்று வரும் போரை நிறுத்துமாறு இஸ்ரேல் பிரதமருக்கும் ஒரு கடிதம் அனுப்ப வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில், மெலனியாவுக்கு எமின் கோரிக்கை விடுத்தார்.

மேலும், அந்தக் கடிதத்தில், காசா போர் காரணமாக பாதிக்கப்பட்ட சிறுவர்களின் சார்பில் தாங்கள் குரல் கொடுக்க வேண்டும் என்றும், தற்போது காசா "சிறுவர் மயானமாக" மாறிவிட்டது எனவே, இந்த அநீதிக்கு எதிராக நாம் நமது பலத்தை ஒன்றுதிரட்டி குரல் கொடுக்க வேண்டும் என்றும் மெலனியாவுக்குத் தெரிவித்துள்ளார்.


ஐ.நா. ஒத்துழைப்புடன் இயங்கி வரும் உணவுப் பாதுகாப்பு நிபுணர்கள், காசாவில் ஐந்து இலட்சம் மக்கள் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களில் 132,000 சிறுவர்கள் போசாக்கின்மையால் உயிராபத்தை எதிர்கொண்டுள்ளதாகவும் குறிப்பிடுகின்றனர்.

ஆயிரக்கணக்கான காசா சிறுவர்களின் சடலங்களின் மீது "அடையாளம் காணப்படாத குழந்தை" என எழுதப்பட்டிருப்பது, நமது மனதில் ஆறாத காயங்களை ஏற்படுத்துகிறது" என எமின் அந்தக் கடிதத்தில் எழுதியுள்ளார்.

"போரில் உயிரிழந்த உக்ரைன் சிறுவர்களுக்காக நீங்கள் வெளிப்படுத்திய உணர்வை காசா சிறுவர்கள் விடயத்திலும் வெளிப்படுத்துங்கள்" என்று மெலனியாவிடம் எமின் தெரிவித்துள்ளார். (நி)

## ...யை புடின் சந்திக்க மாட்டார்

### ட்ரம்ப் வெளிப்படை



பேச்சுவார்த்தை நடத்தினார்.

பின்னர் உக்ரைன் ஜனாதிபதி வெள்ளை மாளிகையில் ட்ரம்பைச் சந்தித்துப் பேசினார்.

இதில் போர் நிறுத்தம் தொடர்பாக எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

இந்நிலையில், புடின் ஏன் ஜெலன்ஸ்கியை சந்திக்க இவ்வளவு தயங்குகிறார்? என்று ட்ரம்பிடம் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு ட்ரம்ப் அளித்த பதில்: உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியை ரஷ்ய ஜனாதிபதி புடின் சந்திக்க மாட்டார், ஏனெனில் அவருக்கு அவரைப் பிடிக்கவில்லை.

இரண்டு போர்க்கால தலைவர்களும் நேருக்கு நேர் சந்திப்பார்களா என்று எனக்கு தெரியவில்லை. ஒரு வேளை அவர்கள் சந்திக்கலாம்.

ரஷ்ய ஜனாதிபதி புடின்-உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியை சந்திக்காவிட்டால் விளைவுகள் ஏற்படும். அடுத்த ஒரு வாரம் அல்லது இரண்டு வாரங்களில் என்ன நடக்கிறது என்பதை பார்த்துவிட்டு அதில் தலையிடுவேன். நான் எப்போதும் சொல்வேன்.

நான் ஒரு சந்திப்பை நடத்தி ஒப்பந்தத்தை முடிப்பதற்கு முன்பு அவர்கள் சந்திக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன் என ட்ரம்ப் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஷீந்திரவுக்கான விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷவை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க உத்தர விட்டுள்ளது.

இந்த உத்தரவை கொழும்பு, நீதிவான் நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

2022 ஆம் ஆண்டு நாடு முழுவதும் நடந்த போராட்டங்களின் போது தீக் கிரையாக்கப்பட்ட செவனகல-கிரிப்பன் வேவா பகுதியில் உள்ள அரசு நிலத்தில் சேதமடைந்த கட்டடத்திற்கு மற்றொரு நபர் மூலம் இழப்பீடு பெற்றதாக கூறப்படும் சம்பவம் தொடர்பாக இலஞ்ச ஒழிப்பு ஆணைய அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ஹரினுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பாக முன்னாள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஜனவரி 6 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்றுக் காலை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது பதுளை நீதிவான் நுஜித் டி சில்வா இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

2024 நவம்பர் 11 அன்று பதுளையில் பொதுத் தேர்தலுக்கான பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தபோது பொலிஸாருடன் ஏற்பட்ட கடுமையான வாக்குவாதம் தொடர்பாக முன்னாள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ கைது செய்யப்பட்டார். (நி)


# கல்யாணமாலை
## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1988- இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>2 இல் செவ்<br>தகைமை/தொழில்: BBM, Canada<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15959 | பிறப்பு-1996-இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி-பா- 25 1/2<br>உயரம் : 5'5"<br>தகைமை/தொழில்: BA<br>எதிர்பார்ப்பு: நிரந்தர வேலை<br>தொ.இ: G/15987 |
| பிறப்பு:1993-இந்து<br>நட்சத்திரம்:பூரட்டாதி<br>12 இல் செவ்<br>உயரம் :5'7"<br>தகைமை/தொழில்-A/L,Driver(own)<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/15960 | பிறப்பு-1999-இந்து<br>நட்சத்திரம்- பூராடம்<br>2 இல் செவ்<br>கி-பா-40 1/2<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: IABF, Senior Banking Assistant<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/15994 |
| பிறப்பு:1984-இந்து<br>நட்சத்திரம்:புனர்பூசம்<br>உயரம் :5'6"<br>தகைமை/தொழில்:A/L, Repairing<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15962 | பிறப்பு-2000-இந்து<br>நட்சத்திரம்-சுவாதி<br>1 இல் செவ்<br>உயரம் : 5'4"<br>தகைமை/தொழில்: Teacher(Swiss)<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/15997 |
| பிறப்பு: 1991- RC<br>நட்சத்திரம் :பரணி<br>8 இல் செவ்<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்- BSc,Civil Engineer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/15967 | பிறப்பு-1991-இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 45 1/4<br>உயரம் :5'3"<br>தகைமை/தொழில்: BA, DO(gov)<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/11011 |
| பிறப்பு: 1984- இந்து<br>நட்சத்திரம்- உத்தரம்<br>கி-பா-33 3/4<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: O/L, Repair<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15968 | பிறப்பு-1990-இந்து<br>நட்சத்திரம்:விசாகம்<br>உயரம் :5'4"<br>தகைமை/தொழில்: BSc, MSc Research Scientist<br>எதிர்பார்ப்பு:உள்நாடு(அரச தொழில்) , வெளிநாடு<br>தொ.இ: G/10927 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 434

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# கடவுள் பயம்!

தெய்வத்துக்குப் பயந்து நடந்துக்கச் சொல்கின்றார்களே. அந்தத் தெய்வ பயம் தேவை தானா? என்று ஒரு பெரியவரைப் பார்த்து கேட்டார் ஒருத்தர். கடவுளைப் பயத்தின் மூலமாக அடையவே முடியாது! என்று பதில் சொன்னார் அந்தப் பெரியவர். (ரஜனீஷ்)

அதற்கு உதாரணமாக ஒரு கதையையும் சொன்னார். ஒரு பிச்சைக்காரன் ஒரு அனாதைச் சிறுவனை வளர்த்துக்கொண்டிருந்தார். அவர்கள் இருந்த குடிசைக்குப் பக்கத்திலே ஒரு சுடுகாடு இருந்தது.

இந்தச் சின்ன பையன் இரவு வேளையிலே அந்தச் சுடுகாட்டு பக்கமாகப் போய் ஏதாவது குறும்பு செய்யாமல் இருக்க வேண்டும் என்று நினைத்தான் அந்தப் பிச்சைக்காரன்.

அதற்காக அந்தப் பையனிடம் சொன்னான். இதோ பாருப்பா... இரவு வேளையிலே அந்தச் சுடுகாட்டு பக்கம் போனால் அங்கே இருக்கிற பேய்கள் உன்னைப் பிடித்து தின்று விடும் என்று சொல்லி பயமுறுத்தினார். அந்தப் பையன் படித்து வாலிபனாக வளர்ந்து விட்டான். இருந்தாலும் இன்னமும் அவனுக்கு பேய் பற்றிய பயம்.

ஒரு நாள் பிச்சைக்காரன் அந்தப் பையனை ஒரு வேலை காரணமா வெளியூருக்கு அனுப்ப வேண்டியிருந்தது. அவன் அந்த சுடுகாட்டைத் தாண்டிப் போக வேண்டும். இரவு நேரம். இவன் பயந்து நடுங்க ஆரம்பித்து விட்டான். இப்போது என்ன செய்வது என்று யோசித்தான் அந்தப் பிச்சைக்காரன்.

ஒரு தாயத்தை எடுத்தான். அந்தப் பையனின் கையிலே அதைக் கட்டினார். இனிமேல் அந்தப் பேய்கள் உன்னை ஒன்றும் செய்ய முடியாது. கடவுள் அந்தப் பேய்களிடமிருந்து உன்னைக் காப்பாற்றுவார் என்றார். இப்போது அந்தப் பையனுக்கு தைரியம் வந்தது.

இப்போது நாங்கள் இந்தப் பேய்களைப் பார்த்து பயப்படுகின்றோம். இந்தப் பேய்கள் கடவுளைப் பார்த்து பயப்படுகின்றது என்றால் அந்தக் கடவுள் எவ்வளவு பெரிய பேயாக இருக்க வேண்டும் என்று நினைக்க ஆரம்பித்தான். உடனே பேய் பயத்தால் கடவுள் பயம் அதிகமாகப் போய்விட்டது.

அதே பயம் கடவுளின் தரகர்கள் மாதிரி நடிக்கிற போலி மனிதர்கள் மீதும் ஏற்பட்டு விட்டது. பாவம் அந்தப் பையன் இரவிலே பேய்க்காக பயந்தான். பகலிலே மகா பேயான கடவுளுக்குப் பயந்தான். போலிச் சாமியார்களைப் பார்த்ததும் பயப்பட ஆரம்பித்துவிட்டான்.

இப்போதுதான் அந்தப் பிச்சைக்காரன் விபரீதத்தை உணர்ந்தான்.

அந்த பையன் கையிலே கட்டின தாயத்தை கழற்றி அடுப்பிலே வீசினான். அன்றைக்கு இரவே அவனை அழைத்துக் கொண்டு அந்தச் சுடுகாட்டுக்குப் போனான். அங்கே பேய் பிசாசு எதுவும் இல்லை என்பதை சுட்டிக் காட்டினான். எதற்காக பேயைப்பற்றி சொன்னேன். எதற்காக தாயத்துக் கட்டி விட்டேன் என்று விவரமாக உண்மையை சொன்னான். அந்த இளைஞனுக்கு இப்போது மனதிலே ஒரு தெளிவு உண்டாயிற்று.

அவன் மனதிலே இருந்த பேய் - பிசாசு எல்லாம் போய் விட்டது. பயத்தினாலே உருவான போலிக் கடவுளும் போய் வருகின்றேன் என்று சொல்லிவிட்டு போய் விட்டார்.

மனுஷனுக்கு "தான்" என்கின்ற எண்ணம் இருக்கு பாருங்கள் அதனாலே உருவாகிற துன்பங்கள், கவலைகள், பாதுகாப்பற்ற நிலை, மரண பயம். இதிலேயிருந்து தப்பிப்பதற்கு கடவுளே கதி என்கின்ற சரணாகதி நிலையை அவன் உருவாக்கி கொள்கிறான் என்கின்றார் அந்தப் பெரியவர்.

இந்தக் காலத்திலே பேய், பிசாசு எல்லாம் ரொம்ப சர்வ சாதாரணமான விடயமாகப் போச்சு! அன்றைக்கு ஒருத்தரைப் பார்த்து, "ஏன் சார்? நீங்கள் பேயைக் கண்ணாலே பார்த்திருக்கிறீர்களா?" என்று கேட்டேன்.

அவர் மெதுவாக என் அருகே வந்து என்ன அப்படிக் கேட்கின்றீர்கள். நான் அதனோடு தானே முப்பது வருஷமாகக் குடும்பம் நடத்திக்கொண்டு வருகின்றேன் என்று சொல்லி விட்டு அலட்டிக்காமல் போனார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி வைத்தியசாலையின் மனிதவளப் பற்றாக்குறைக்கு விரைவில் தீர்வு

## ஆளுநர் தெரிவிப்பு

(கொழும்பு)

நெதர்லாந்து அரசின் நிதி உதவியில் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள வடக்கு மாகாண பெண் நோயியல் மருத்துவமனையை படிப்படியாக எவ்வளவு விரைவாக இயக்க முடியுமோ அவ்வளவு விரைவாக இயக்குவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறும், இதற்குத் தேவையான ஒத்துழைப்புக்கள் வழங்கப்படும் எனவும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

மருத்துவமனையின் செயற்பாடுகளை இயக்குவது தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை நடைபெற்றது. இதன் போத இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த ஆளுநர், மேற்படி மருத்துவமனை திறந்து வைக்கப்பட்டு இன்னமும் செயற்படாத நிலையில் அங்குள்ள உபகரணங்கள் வேறு மாகாணங்களுக்கு கொண்டு செல்லப்படவுள்ளதாக வதந்திகள் பரப்பப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டார். அவ்வாறான எந்தவொரு நகர்வும் முன்னெடுக்கப்படாத நிலையில் இவ்வாறான கதைகள் பரப்பப்பட்டு வருகின்றன என்றும் தெரிவித்தார்.

நெதர்லாந்து அரசின் நிதி உதவியில் வடக்கில் அமைக்கப்பட்ட 4 மருத்துவமனைகளில் மாங்குளம் மருத்துவமனைக்கு மாத்திரம் ஆளணிக்குரிய அனுமதி கிடைக்கப் பெற்றதாகவும், ஏனைய மூன்று மருத்துவமனைகளுக்கும் ஆளணி அனுமதி இன்னமும் கிடைக்கவில்லை என ஆளுநர் குறிப்பிட்டார். ஆளணி அனுமதி கிடைக்காத போதும் இருக்கின்ற வளங்களை வைத்துக் கொண்டு பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் திறக்கப்பட்ட மருத்துவ அலகு சிறப்பாக இயங்குவதாகவும் ஆளுநர் சுட்டிக்காட்டினார். அந்த மருத்துவ அலகு சிறப்பாக இயங்குவதற்குத் தேவையான ஒத்துழைப்புக்கள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றது எனவும் குறிப்பிட்டார்.

அதேபோல கிளிநொச்சி மருத்துவமனையில் அமைக்கப்பட்டுள்ள வடக்கு மாகாண பெண் நோயியல் மருத்துவமனையையும் இயக்கத் தொடங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்ட ஆளுநர், அங்குள்ள மனிதவளப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சுட்டிக் காட்டினார். (8)

# மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் தெற்கு அருள் மிகு ஸ்ரீ சிவபூதராஜர் தேவஸ்தான அஷ்டபந்தன பஞ்சகுண்ட பக்ஷ மஹா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை காலை 9.15 மணி முதல் 10.15 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளது.

இன்று புதன்கிழமை காலை 6 மணிக்கு கர்மாரம்பக் கிரியைகளுடன் ஆரம்பமாகி நாளை வியாழக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 3 மணிவரை எண்ணெய்க் காப்பு சாத்துதல் நிகழ்வும் இடம் பெறவுள்ளதென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள் ளனர். (3)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 350 | 300 | 350 | 320 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 200 | 140 | 150 |
| தக்காளி | 300 | 250 | 300 | 200 | 280 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 300 | 250 | 200 |
| கோவா | 250 | 280 | 350 | 230 | 300 |
| கரட் | 400 | 450 | 500 | 400 | 450 |
| பூசணி | 100 | 100 | 80 | 60 | 80 |
| புடோல் | 150 | 100 | 100 | 80 | 120 |
| வாழைக்காய் | 150 | 150 | 120 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 200 | 150-300 | 300 | 230 | 280 |
| பெரிய வெங்காயம் | 150 | 180 | 150 | 120 | 200 |
| பாகற்காய் | 350 | 450 | 400 | 300 | 400 |
| வெண்டைக்காய் | 200 | 150 | 200 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 300 | 330 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 250 | 250 | 250 | 400 | 300 |
| லீக்ஸ் | 300 | 250 | 250 | 180 | 300 |
| பீற்றூட் | 100 | 100 | 250 | 100 | 150 |
| கறிமிளகாய் | 400 | 400 | 400 | 300 | 400 |
| முருங்கைக்காய் | 250 | 250 | 400 | 180 | 300 |
| போஞ்சி | 600 | 600 | 600 | 450 | 700 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | 150 | -- | 280 |
| கீரை - 1 பிடி | 120 | 60-140 | 150 | 80 | 100 |
| தேசிக்காய் | 300 | 180 | 400 | 300-400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 160 | 200 | 150 | 120-180 | 150-200 |
| இராசவள்ளி | 800 | 700 | 500 | 450 | 800 |
| வெங்காயப்பூ | 400 | 300 | 150 | 250 | 300 |
| முள்ளங்கி | 100 | 160 | 150 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 180 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 80 | 200 |

# வவுனியாவில் பண்டாரவன்னியனின் 222 ஆவது ஞாபகார்த்த நிகழ்வு



(வவுனியா)

தேசிய மாவீரன் பண்டார வன்னியனின் 222 ஆவது ஞாபகார்த்த நிகழ்வு வவுனியா மாநகரசபை மற்றும் கலாசார பேரவையின் ஏற்பாட்டில் மாவட்ட செயலக வளாகத்தில் அமைந்துள்ள பண்டாரவன்னியன் சதுக்கத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது மாவட்ட செயலக வாயிலில் இருந்து சிலை அமைந்துள்ள பகுதி வரை பண்டாரவன்னியனின் படை சூழ விருந்தினர்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். அதனைத் தொடர்ந்து பண்டார வன்னியனின் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

மாநகர முதல்வர் சு.காண்டீபன் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் மாவட்ட அரச அதிபர் பி.ஏ.சரத்சந்திர, மேலதிக அரச அதிபர் நா.கமலதாசன், பிரதேச செயலாளர் இ.பிரதாபன், மாநகர துணை முதல்வர் ப.கார்த்தீபன், ஆணையாளர் பொ.வாசீசன், மாநகரசபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், பொது அமைப்பினர் கலந்து கொண்டனர். (8-250)

# இராசிபலன்

27.08.2025
ஆவணி 11, புதன்கிழமை
சதுர்த்தி பிற்பகல் 3.38 மணிவரை

அத்தம் காலை 6.59 மணிவரை
சுப நேரம் 4.35-6.05 மணிவரை
விநாயகர் சதுர்த்தி விரதம்

சந்திராஷ்டமம்: பூரட்டாதி

வளவன்

**மேஷம்:** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், கடுமையான எதிர்ப்புக்கள் கூட திடீரென சாதகமாகி விடும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள்.

**கடகம்:** உறவினர் நண்பர்களின் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**துலாம்:** புதிய பொறுப்புக்களும் சுமைகளும் வந்து சேரலாம், வழிபாட்டால் ஆனந்தம் கூடும், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**மகரம்:** பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, உங்களின் திறமைகள் மேம்படும் நாள், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், பகையொன்று நட்பாகலாம்.

**ரிஷபம்:** எதிர்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், இயல்பான வாழ்வில் இன்பங்கள் கூடும் நாள்.

**சிம்மம்:** சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகி மனநிம்மதியைக் கொடுக்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், பயணங்களால் பலனுண்டு, நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பெரிய மனிதர்களின் சந்திப்பால் சிந்தை மகிழ்வீர்கள்.

**கும்பம்:** பொது வாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, பயணங்களின் போது நிதானம் தேவை, தொழிலில் கவனம் தேவை, ரோக பயமுண்டு.

**மிதுனம்:** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும் வாய்ப்புண்டு, உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், பெற்றோர் மீது பிரியம் கூடும்.

**கன்னி:** நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, உடல் நலனில் கவனம் தேவை, கல்யானக் கனவுகள் நனவாகலாம், வழிபாட்டால் மகத்துவம் காணும் நாள்.

**தனுசு:** பாதியில் நின்ற பணியை மீண்டும் தொடர்வீர்கள், புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், தொலைதூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மீனம்:** நிதி நிலை உயர்ந்து நிம்மதி கிடைக்கும் நாள், சிறப்பாக பணிகளைச் செய்து பெரியவர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், குடும்பத்தினரிடையே மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

சொர்க்கமும் நரகமும் உன் இதயத்தில் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# கல்கியின் பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

பாகம் - 4

853





"திருக்கோவலூர் மலையமான்" மணிமுத்தா நதி வரையில் இளவரசருடன் வந்து திரும்பிப் போய்விட்டார்?

"அந்த வீரக்கிழவன் சும்மா இருக்கமாட்டான். இதற்குள் சைனியம் திரட்டத் தொடங்கியிருப்பான். தெற்கேயிருந்து கொடும்பாளூர்ப் பெரிய வேளான் பெரிய சைன்யத்துடன் வருவதாகக் கேள்விப்படுகிறேன். இந்த ராஜ்யத்துக்கு கேடு ஒன்றும் வராமல் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும். திருமலை! நீ வரும் வழியில் சோழ நாட்டு மக்கள் என்ன பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பது ஏதேனும் காதில் விழுந்ததா?"

"சின்ன இளவரசருக்கு நேர்ந்த கடல் விபத்தைப் பற்றியே அதிகம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். பழுவேட்டரையர்கள் மீது ஒரே கோபமாயிருக்கிறார்கள். சிலர் தங்களையும் சேர்த்துக் குறை கூறுகிறார்கள்"

"ஆம், ஆம் குறை கூறுவதற்கு அவர்களுக்கு நியாயம் இருக்கத்தான் செய்கிறது. திருமலை! சீக்கிரத்தில் இந்த முதன்மந்திரி உத்தியோகத்தை விட்டுவிட எண்ணியிருக்கிறேன்.."

"குருவே! தாங்கள் அப்படிச் செய்தால் எனக்கும் விடுதலை கிடைக்கும். ஆழ்வார்களின் பாசுரங்களை நாடெங்கும் பாடி யாத்திரை செய்து ஆனந்தமாய்க் காலம் கழிப்பேன். எப்போது உத்தியோகத்தை விட்டு விடப் போகிறீர்கள், ஐயா!"

"இராஜ்யத்திற்கு விபத்து நேராமல் பாதுகாக்கக் கடைசியாக ஒரு முயற்சி செய்து பார்க்கப் போகிறேன் அது முடிந்ததும் விடப்போகிறேன்.." "அது என்ன முயற்சி குருவே?"

"அந்த முயற்சியில் மிக முக்கியமான முதற்படி ஏறியாகி விட்டது. திருமலை! உன்னால் வரமுடியாது என்று நீ கைவிட்டு விட்ட ஒரு காரியத்தில் நான் வெற்றி பெற்று விட்டேன்"

"அதில் வியப்பு ஒன்றுமில்லை ஐயா! அது என்ன காரியமோ?"

"ஈழத் தீவில் பித்துப்பிடித்தவள் போலத் திரிந்து கொண்டிருக்கும் ஓர் ஊமை ஸ்திரீயைத் தேடிப் பிடித்து அழைத்து வரச் சொன்னேன் அல்லவா? உன்னால் அந்தக் காரியம் முடியவில்லை என்று திரும்பி வந்து கூறினாய் அல்லவா?" என்று அநிருத்தர் கேட்டார்.

"ஆம், ஐயா! அந்த ஊமை ஸ்திரீ" "நேற்றிரவு நம் அரண்மனைக்கு அவளைக் கொண்டு வந்தாகி விட்டது."

"ஆகா! அதிசயம்! அதிசயம்! இதை எப்படிச் சாதித்தீர்கள்?" "சின்ன இளவரசர் தப்பிப் பிழைத்தாரா இல்லையா என்று தெரிந்து கொள்ள அந்த ஊமைப் பெண் கோடிக்கரைக்கு வருவாள் என்று எதிர்பார்த்தேன். வந்தால் அவளைப் பிடித்துக் கொண்டு வரும்படி ஆட்களை அனுப்பியிருந்தேன். நல்ல வேளையாக அவள் அதிக தொந்திரவு கொடுக்காமலே வந்து விட்டாள். இந்த வேடிக்கையைக் கேள், திருமலை! திருவையாற்றிலிருந்து அவளை மூடுபல்லக்கில் வைத்து அழைத்து வரச் செய்தேன். இதற்காகப் பழுவூர் ராணியின் மூடுபல்லக்கையே வரச் செய்தேன்."

"ஐயா நேற்று மாலை பெரும் புயலும் மழையும் அடித்ததே!"

(தொடரும்...)

## நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள குருநகர் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு இலவசமாக விலங்கு விசர்நோய் தடுப்பூசி கீழ் வரும் இடங்களில் வைத்து தடுப்பூசி ஏற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளுமாறும் ஓர் நாய்க்கான உரிமக் கட்டணமாக 100 ரூபாய் அறவிடப்படும் எனவும் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (8)

| திகதி | நேரம் | தடுப்புமருந்து ஏற்றப்படும் நிலையத்தின் பெயர் |
|---|---|---|
| 27.08.2025 | மு.ப9.00- முப.11.00<br>மு.ப11.00- பிப.1.00<br>பி.ப2.30- பி.ப.4.00 | பழைய பூங்கா வீதி<br>புதிய வீடமைப்பு திட்ட வீதி<br>தொடர்மாடி குடியிருப்பு |
| 28.08 2025 | மு.ப9.00- முப.11.00<br>மு.ப11.00- பி.ப.1.00<br>பி.ப2.30- பி.ப.4.00 | குருநகர் பொலிஸ் நிலையத்துக்கு அருகில்<br>பழைய பூங்கா சிறுவர் நீதிமன்றப்பகுதி<br>திருநகர் மாணவர் படிப்பகம் |
| 29.08 2025 | மு.ப9.00- முப.11.00<br>மு.ப11.00- பி.ப.1.00<br>பி.ப2.30- பி.ப.4.00 | இராஜாங்கம் வீதி மாதாசிலையடி பகுதி<br>சென்பற்றிக்ஸ் வீதி சேமகாலை அருகில்<br>சென்பற்றிக்ஸ் வீதி கதிற்றல் வீதி சந்தி அருகில் |
| 01.09. 2025 | மு.ப9.00- முப.11.00<br>மு.ப11.00- பி.ப.1.00<br>பி.ப2.30- பி.ப.4.00 | இராஜேந்திரா வீதி<br>டேவிற் வீதி கடற்கரை வீதி சந்தி அருகில்<br>மவுண்காமல் வீதி பாங்சால் வீதி |
| 02.09. 2025 | மு.ப9.00- முப.11.00<br>மு.ப11.00- பி.ப.1.00<br>பி.ப2.30- பி.ப.4.00 | சென்றோக்ஸ் சனசமூக நிலையம்<br>றெக்கிளமேசன் சனசமூகநிலையம்<br>புதிய கடற்கரை தண்ணீர்தாங்கி சந்தி |
| 03.09. 2025 | மு.ப9.00- முப.11.00<br>மு.ப11.00- பி.ப.1.00<br>பி.ப2.30- பி.ப.4.00 | தண்ணி தாங்கி 4 ஆம். 5ம் குறுக்குத்தெரு<br>சென் ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை முன்பாக<br>2 ஆம் குறுக்குத்தெரு குருநகர் |
| 04.09. 2025 | மு.ப 9.00- முப.11.00<br>மு.ப11.00- பி.ப.1.00<br>பி.ப2.30- பி.ப.4.00 | ஜஸ்பிளான்ட வீதி<br>குருநகர் சனசமூக நிலையம் முன்பாக<br>கடற்கரை வீதி 1 ஆம் குறுக்குத்தெரு சந்தி |
| 08.09. 2025 | மு.ப9.00- முப.11.00<br>மு.ப11.00- பி.ப.1.00<br>பி.ப2.30- பி.ப.4.00 | பாங்சால் வீதி 4ஆம் குறுக்குத்தெரு சந்தி<br>யாகப்பர் ஆலயத்திற்கு அருகாமை<br>புதுமை மாதா ஆலயத்திற்கு அருகாமை |
| 09.09. 2025 | மு.ப9.00- மு ப.11.00<br>மு.ப11.00- முப.12.00<br>பி.ப12.00- பிப.1.00<br>பி.ப2.30- பிப.4.00 | ஓடக்கரை வீதி<br>யூபிவி மகப்பேற்று நிலையம் முன்பாக<br>குருநகர் சின்ன ஆஸ்பத்திரி முன்பாக<br>செபஸ்தியார் கோவில் அருகாமை |



முல்லைத்தீவு விவசாயத் திணைக்களமும், (தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் வழிகாட்டல்) கிரிசலிஸ் நிறுவனமும் இணைந்து நடத்திய விவசாயிகள் வயல் வியாபார பாடசாலை குழுக்களின் சிறந்த விவசாய நடைமுறைகளைப் பின்பற்றிய நிலக்கடலை செய்கையின் வயல் விழா நிகழ்வானது தண்டுவான் விவசாய விரிவாக்கல் பிரிவில் பழம்பாசி கிராமத்தில் கடந்த 25 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டு பிற்பகல் 6 மணி வரை நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறுகளை நாம் அனுமதிக்கும் போதே அவை நம்மை தடம் மாற்றி விடுகின்றன. – அறிஞர்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

# கண்ணியம்மிக்க நாட்டை உருவாக்குவது தக்கார் கடமை

தமிழில் **தக்கார்** என்ற சொற்பதத்தின் பொருளை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும்.

திருக்குறளைத் தந்த வள்ளுவப் பெருமான் **தக்கார் – தகவிலர்** என்ற இரு நிலைக்குள் உலக மாந்தரை வகைமைப்படுத்துகின்றார்.

ஆம், இந்த உலகில் **தக்கார் – தகவிலர்** என இருவகையினர் உள்ளனர். இதில் **தக்கார்** என்போர் நடுவுநிலை தவறாத பெருமக்கள். நடுவுநிலை தவறிய ஏனையவர்கள் **தகவிலர்.**

இதைக் கூறிய வள்ளுவப் பெருமான் தக்கார் என்போரையும் தகவிலர் என்போரையும் எப்படி இனங்காண்பது என்ற கேள்வியைத் தானே எழுப்பி, அதற்குப் பதிலும் தருகிறார்.

**தக்கார் – தகவிலர்** என்பதை அவரவர் எச்சமான புகழும் பழியும் நிர்ணயம் செய்யும்.

ஆக, இந்த உலகில் எத்துணை துன்பம் வரினும் நடுவுநிலை தவறாத உயர்ந்த தர்மத்தை நாம் பின்பற்ற வேண்டும்.

அதிலும் ஆட்சி அதிகாரத்தில் இருக்கின்றவர்கள் எச்சந்தர்ப்பத்திலும் நேர்மை, நியாயம், நடுவுநிலை என்ற அறங்களைப் பின்பற்றி வாழ்வது மிகவும் அவசியமாகும்.

உண்மை. தமிழகத்திலுள்ள சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் மனுநீதிச் சோழ மன்னனுடைய கம்பீரமான சிலை நிறுவப்பட்டுள்ளது.

தன் மகன் என்று தெரிந்தும் கன்றை இழந்த பசுவுக்கு நீதி வழங்க வேண்டும். அதுவே நீதி நெறி தவறாத ஆட்சி என்பதில் மனுநீதிச் சோழ மன்னன் திடசங்கற்பம் கொண்டிருந்தான்.

அதனாலன்றோ, ஆராய்ச்சி மணியை அடித்து தன் துன்பத்தை மன்னர் பிரானுக்கு வெளிப்படுத்திய பசுவுக்கு, தன் மகனைக் கொன்று நீதி வழங்கும் அளவில் மனுநீதிச் சோழ மன்னன் உயர் நிலை பெற்றிருந்தான்.

எனினும் இன்றைய சமகாலத்தில் மேற்குறித்த அறங்கள் பற்றி எதுவும் சிந்திக்கப் படவில்லை என்பது தெரிகிறது.

எதுவாயினும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் ஆட்சியில் நீதி நிலை நாட்டப்படுவதற்கான முயற்சிகள், ஏதுக்கள் தென்படுகின்றன.

போக்குவரத்துப் பொலிஸார் தமது கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பது தெரிகிறது. இலஞ்சம் பெறுவதில் அவர்களிடம் தயக்கம் உள்ளது.

இதேபோல அரச அலுவலகங்களில் பொது மக்களுக்கான மரியாதை வலுப்பெற்று வருகிறது.

இவை உச்சமடையும்போது நாடும் மக்களும் கண்ணியம்மிக்கவர்களாக ஆகிவிடுவர்.

அந்தக் கண்ணியம்மிக்க சமுதாயத்தை உருவாக்க யார் முயற்சி செய்தாலும் அந்த விடயத்தில் அவர்களுக்கு ஆதரவு வழங்குவது **தக்கார்** கடமையாகும்.

## சம்பூரில் மனிதப் புதைகுழி!

# ஸ்கான் ஆராய்ச்சிக்கான மதிப்பீடு மூதூர் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது

(மூதூர்)

சம்பூரில் மனித எச்சங்கள் கண்டெடுக்கப்பட்ட காணியில் மேலும் மனித எச்சங்கள் இருக்கின்றனவா? என்பதை ஸ்கான் கருவி மூலம் ஆராய்வதற்கான மதிப்பீடு நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சம்பூரில் மனித எச்சங்கள் மீட்கப்பட்டமை தொடர்பான வழக்கானது நேற்று மூதூர் நீதிமன்ற நீதவான் தஸ்னீம் பௌஸான் முன்னிலையில் எடுத்து கொள்ளப்பட்டது.

இதன்போது சம்பூர் பிரதேசத்தில் மனித எச்சங்கள் இருக்கின்றனவா? என்பதை தொல்பொருள் திணைக்களத் திடமுள்ள ஸ்கான் இயந்திரம் மூலம் மேலும் ஆராய்வதற்கான உத்தேச செலவு மதிப்பீடு தொல்பொருள் திணைக்களம், சட்ட வைத்திய அதிகாரி, சம்பூர் பொலிஸார், காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் ஆகியவற்றின் கையொப்பத்துடன் மூதூர் நீதவான் நீதிமன்றத்தில் சம்பூர் பொலிஸாரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

குறித்த உத்தேச செலவு மதிப்பீடு மூதூர் நீதிமன்றத்தின் கட்டளையுடன் மாகாண மேல் நீதிமன்றத்துக்கு அனுப்பப்படும் எனவும் அதற்கான அனுமதி கிடைத்தபின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து பரிசீலிக்கப்படும் எனவும் மன்று அறிவித்துள்ளது. (ம-7)

## நல்லூரான் மகோற்சவத்தில்

# தவறவிட்ட பொருட்களை மாநகர சபையில் பெறலாம்

நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த பெருந்திருவிழாக் கால கட்டத்தில் பக்தர்களால் தவறவிடப்பட்ட பொருட்கள் யாழ்.மாநகர சபையின் உற்சவகாலப் பணிமனையில் ஒப்படைக்கப்பட்ட நிலையில் தற்போது யாழ்.மாநகர சபையின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளன.

அவற்றுள் சாரதி அனுமதிப்பத்திரங்கள், தேசிய அடையாள அட்டைகள், மணிக்கூடுகள், திறப்புக்கள், வங்கி அட்டைகள், கைப்பைகள் உள்ளிட்ட பெறுமதி வாய்ந்த பொருட்களும் உள்ளடங்குகின்றன.

உரிமையாளர்கள் தகுந்த ஆதாரங்களுடன் உரிய அடையாளத்தை உறுதிப்படுத்தி யாழ்.மாநகரசபையின் நிர்வாகக் கிளையில் இன்று (27) புதன்கிழமை முதல் 27.09.2025ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என மாநகர ஆணையாளர் கிருஷ்ணேந்திரன் அறிவித்துள்ளார். (ம-7)

# இலஞ்சம் பெறமுயன்ற கிராம சேவகர் கைது

மொனராகலை கொவிதுபுர பகுதியைச் சேர்ந்த பெண் கிராம சேவகர் ஒருவர் இலஞ்சம் பெறமுயன்ற குற்றத்துக்காக இலஞ்ச ஊழல் ஒழிப்பு விசாரணை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பரவாய கிராம சேவையாளர் பிரிவில் பணிபுரியும் குறித்த பெண் கிராம சேவகர் அலுமாரி வாங்குவதற்காக 23 ஆயிரத்து 500 ரூபாய் பெறுமதியான பற்றுச்சீட்டை பெற்றுக் கொண்டிருந்த போது கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண் கிராம சேவகர் சியம்பலாண்டுவ பொலிஸ் நிலையத்தில் மேலதிக விசாரணைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ம-7)

# முல்லைத்தீவு முத்தையன்கட்டில் இளம் குடும்பஸ்தர் மரணம்

## நான்கு இராணுவத்தினருக்கும் பிணை

(முல்லைத்தீவு)

முத்தையன்கட்டில் இளம் குடும்பஸ்தரது மரணம் தொடர்பான வழக்குடன்தொடர்புடைய நான்கு இராணுவத்தினருக்கும் நேற்றுப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு முத்தையன்கட்டுப் பகுதியில் மர்மமான முறையில் குளக்கரையில் சடலமாக மீட்கப்பட்ட இளம் குடும்பஸ்தரின் மரணம் தொடர்பில் ஒட்டிசுட்டான் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கானது நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிபதி எம்.எச்.மஹ்றூஸ் தலைமையில் எடுத்து கொள்ளப்பட்டிருந்தது.

இதன்போது சட்டத்தரணி கெங்காதரன் தலைமையிலான நான்கு சட்டத்தரணிகள் அவர்கள் உயிரிழந்த பாதிக்கப்பட்ட இளைஞருக்காக நியாயங்களை முன்வைத்திருந்தனர்.

தொடர்ந்து இராணுவத்தினருக்கான பிணை கோரிக்கை இராணுவத்தரப்பு சட்டத்தரணியால் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் கடும் நிபந்தனைகளின் பின்னர் குறித்த நான்கு இராணுவத்தினரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு இராணுவத்தினருக்கும் தலா மூன்று இலட்சம் ரூபா பெறுமதியிலான இரண்டு சரீரப்பிணையில் பிணை வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான வழக்கு விசாரணை எதிர்வரும் 30.09.2025 அன்று திகதியிடப்பட்டுள்ளது. (ம-7,299)

# சுமந்திரனுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

இலங்கை தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ. சுமந்திரனுக்கு எதிரான வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் பிரதி தவிசாளர் தெரிவுகளின் போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அறிவுறுத்தலுக்கு மாறாக செயற்பட்டதாக கூறி வலிவடக்கு பிரதேச சபை உறுப்பினர் பொன்னம்பலம் ராசேந்திரம் கட்சி உறுப்பினர் பதவியிலிருந்து சுமந்திரனால் கடிதம் ஒன்றின் மூலம் இடைநிறுத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து குறித்த பிரதேச சபை உறுப்பினர், சுமந்திரன் தன்னை மத்திய குழுவின் தீர்மானம் எதுவுமின்றி கட்சியிலிருந்து தன்னிச்சையாக நீக்கியதாக யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

கடந்த தவணை குறித்த வழக்கில் தோன்றிய தமிழரசுக் கட்சியின் தலைவர் மற்றும் பொதுச் செயலாளர் குறித்த வழக்குத் தாக்கல் செய்ததே தவறு என தமது ஆட்சேபனையினை எழுத்துமூலம் தாக்கல் செய்திருந்தனர்.

குறித்த ஆட்சேபனைக்கு நேற்று செவ்வாய்க் கிழமை தமது பதில் ஆட்சேபனையைக் குறித்த பிரதேச சபை உறுப்பினர் தாக்கல் செய்திருந்தார்.

அதில் குறித்த கட்சியின் தலைவர் மற்றும் செயலாளரால் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபனையானது ஒரு பகுதி ஆங்கிலத்திலும் அதன் மறு பகுதி தமிழிலும் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டமை சட்டத்திற்கு புறம்பானது. யாழ்ப்பாணத்தில் நீதி நிர்வாக மொழி தமிழ் ஆகையால் முழுமையாக தமிழிலேயே ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட வேண்டும் எனப் பிரதேச சபை உறுப்பினரால் தாக்கல் செய்யப்பட்டிருந்த ஆட்சேபனையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த வழக்கானது ஐப்பசி மாதத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (ம-7,33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 47

சொக்கன்

இந்த விடயத்தில் மொசாட் ஒரு படி மேலே சென்றுவிட்டது. அவர்கள் தங்களுடைய பணிகளில் அதிகம் உதவுகிற பொது மக்களுக்கு Hero of silence (மௌனக் கதாநாயகர்கள்) என்கிற விசேஷ விருது ஒன்றைக் கொடுத்துக் கௌரவிக்கிறார்கள்.

ஹீரோ ஆஃப் சைலன்ஸ் விருதைப் பெற்ற முதல் நபர் ஒரு ஹீரோயின். அவர் பெயர் ஷூலா!

*1920* ஆம் ஆண்டு ஜெருசேலம் நகரத்தில் பிறந்த ஷீலாவுக்கு ஏகப்பட்ட சகோதர சகோதரிகள். அதிகம் படிக்கவில்லை. சமையல், வீட்டு வேலைகளைக் கற்றுக் கொண்டார். வயது பதினாறைத் தொட்டதும் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்து விட்டார்கள்.

ஷூலாவுக்கு நிச்சயிக்கப்பட்ட மாப்பிள்ளையின் பெயர் ஜோசஃப் கிஷக் கோஹென். லெபனாலில் பெரிய வியாபாரி. வயது முப்பத்தாறு.

சிறுமி ஷூலா தன்னைவிட இருமடங்கு வயதான வழுக்கைத் தலை ஜோசஃபைக் கவலையோடு பார்த்தாள். எனக்கு இந்தக் கல்யாணம் வேணாம். என்று எதிர்ளத்துப் பேசு கிற தைரியம் அவ ளுக்கு இல்லை. என் விதி அவ்வளவுதான் என்று மௌனமாகத் தலையாட்டிவிட்டாள்.

திருமணம் முடிந்ததும் ஜோசஃப் ஷூலாவை லெபனாணுக்கு அழைத்துச் சென்று விட்டார். புது நாடு வித்தியாசமான மொழி, மக்கள் பழக்கவழக்கங்கள், சூழ்நிலை எதுவும் புரியாமல் வீட்டுக்குள் அடைபட்டுக் கிடந்தாள் அவள்.

அடுத்த சில மாதங்களுக்குள் பக்கா குடும்பத் தலைவியாகிவிட்டாள் ஷூலா. தினந்தோறும் மூன்று வேளை சமையல், வீட்டைப் பெருக்கித் துடைத்து ஒழுங்குபடுத்துவது, பிள்ளை பெற்றுக் கொள்வது, குழந்தைகளைக் கவனிப்பது அவ்வளவு தான்.

ஒருகட்டத்தில் ஷூலாவுக்கு அந்த வீடே சிறைச்சாலைமாதிரி தோன்றத் தொடங்கிவிட்டது. நாலுபக்கமும் இருக்கிற சுவர்களைப் பார்த்தால் கூடப் பயமாக இருந்தது. என்றைக்காவது அந்தச் சுவர்கள் நெருங்கி வந்துதன்னைக் கொன்றுவிடுமோ என்று நடுங்கினாள்.

என்ன? மெகா சீரியல் மாதிரி இருக்கிறதா? கவலைப்படாதீர்கள் இனிமேல்தான் ஷூலாவின் வாழ்க்கையில் கியர் மாறப்போகிறது. வேகம் கூடப் போகிறது.

*1947* ஆம் ஆண்டு யூதர்கள், பாலஸ்தீனர்கள் இடையிலான கலாட்டக்கள் உச்சத்தை எட்டியிருந்த நேரம். இஸ்ரேல் என்கிற புதுதேசம் உருவாவதற்கான சூழல் ஏற்பட்டிருந்து.

அப்போது சில அரேபியர்கள் ஷூலாவின் கணவரைப் பார்க்க வந்திருந்தார்கள். அவர்கள் தங்களுக்குள் பேசிக் கொள்வது எதேச்சையாக அவள் காதில் விழுந்தது.

ஷூலா அப்படியே உறைந்து நின்றுவிட்டாள். இந்த ஆட்கள்



என்ன பேசிக் கொள்கிறார்கள்? ஏதோ இரகசியத் தாக்குதல் ஆயுதம் முற்றுகை என்று எல்லாம் விபரீதமாக் காதில்விழுகிறதே! கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தாள்.

சிறிது நேரத்தில் அவளுக்கு விடயம் புரிந்துவிட்டது. இவர்கள் யூதர்களுடைய விரோதிகள் இஸ்ரேலை ஆரம்பத்திலேயே தாக்கி அழிக்கத் திட்டம் போடுகிறார்கள்.

ஷூலா பதற்றத்துடன் யோசித்தாள் இப்ப நான் என்ன செய்ய வேண்டும். இந்த தடிப் பசங்களைப் பொலிஸில் பிடிச்சுக் கொடுக்க வேண்டுமா? இல்லை என்றால் இவர்கள் எங்கே எப்படித் தாக்கப் போகிறார்கள் என்கின்ற தகவலை இஸ்ரேலுக்கு அனுப்பி வைக்கலாமா?

அடுத்த நிமிடம் மனதளவில் ஷூலா ஓர் உளவாளியாக மாறி விட்டாள் வந்திருப்ப [illegible] கூடுதல் விபரங்களைக் கறக்கலாம் என்று தீவிரமாக யோசிக்க ஆரம்பித்தாள்.

அவளுடைய நல்ல நேரம் அந்த அரேபியர்கள் ஷூலாமீது சந்தேகப்படவில்லை. அவள் வருவதைப் பார்த்ததும் சட்டென்று பேச்சை மாற்றினார்கள். நல்ல பிள்ளைகளைப்போல் முகத்தை வைத்துக் கொண்டார்கள்.

ஷூலாவும் தனக்கு ஒன்றும் தெரியாததுபோலவே நடந்து கொண்டாள். எல்லா விருந்தினர்களையும் கவனிப்பது போல் அவர்களைப் புன்னகையோடு உபசரித்தாள். ஆனால் உள்ளுக்குள் ஒரு கணக்குஓடிக் கொண்டிருந்து. இவர்கள் சந்தேகப்படாதமாதிரி பேசி அந்தத் தகவல்களை வாங்க வேண்டும். அது எப்படி?

கொஞ்ச நேரத்தில் அந்த அரேபியர்களுக்கு ஷூலாமீது முழு நம்பிக்கை வந்துவிட்டது. அவளுடைய குழந்தைத் தனமான முகபாவம் அப்பாவிக் கேள்விகள் அசட்டுச் சந்தேகங்களையெல்லாம் பார்க்கும்போது அவர்களுக்குத் துளியும் சந்தேகம் எழவில்லை.

இந்த வாய்ப்பை ஷூலா பிரமாதமாகப் பயன்படுத்திக்கொண்டாள். அவர்களுடன் சாதாரணமாகப் பேசுவதுபோல் கொஞ்சம் கொஞ்சமாகத் தனக்கு வேண்டியவிபரங்களைக் கறந்துவிட்டாள். அடுத்து இந்தத் தகவல்களை இஸ்ரேலில் உள்ள யூதர்களிடம் அனுப்பவேண்டும் எப்படி?

இதற்கும் ஷூலா ஒரு வழி கண்டுபிடித்தாள். ஜெருசலேத்தில் இருக்கும் தன்னுடைய அத்தைக்கு ஒரு கடிதம் எழுதினாள். அதற்குள் அரேபியர்களின் தாக்குதல்பற்றிய ரகசியங்களைச் சங்கேத மொழியில் குறிப்பிட்டுவிட்டாள். இந்தக் கடிதத்தை ஒரு நண்பர் உதவியுடன் யூதர்களின் கைக்குச் சென்று சேரும்படி அனுப்பிவைத்தாள்.

ஒருவாரம் கழித்து அத்தையிடமிருந்து பதில் வந்தது. தகவலுக்கு நன்றி. இந்த அத்தையை மறந்துவிடாதேம்மா அடிக்கடி லெட்டர் போடு!

இந்தச் சம்பவம் ஷூலாவின் வாழ்க்கையில் மிகப் பெரிய திருப்புமுனையாகிவிட்டது அதுவரை தன்னுடைய கணவர், குழந்தைகளைக் கவனித்துக்கொள்வதுதான் வாழ்க்கை என்று முடங்கிக் கிடந்தவள் இப்போது பலதரப்பட்ட மனிதர்களைப் பார்த்துப் பேசுவதில் ஆர்வம் காட்ட ஆரம்பித்தாள்.

யார் என்ன சொன்னாலும் இந்தத் தகவல் ஏதாவது ஒரு விதத்தில் இஸ்ரேல் மக்களுக்குப் பயன்படுமா என்று யேசிக்கத் தொடங்கினாள்.

ஷூலாவின் கணவர் லெபனான், சிரியா வட்டாரங்களில் பெரிய ஆள். ஆகவே முக்கியமான அரசியல்வாதிகள், அதிகாரிகள் பண முதலைகள் போராளி அமைப்புகளைச் சேர்ந்தவர்களெல்லாம் அடிக்கடி அவரைப் பார்க்க வருவார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படகு மோதியதில்...

தளம் உடப்புப் பகுதியை சேர்ந்த சின்னத்தம்பி சசிதரன் (வயது-25) என்பவரே உயிரிழந்தவராவார்.

வெளிமாவட்டத்தைச் சேர்ந்த கடற்தொழிலாளர்கள் சுண்டிக்குளம் பகுதியில் வாடி அமைத்து கரைவலை தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை சீரற்ற கால நிலை காரணமாக கடல் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது.

அதனால் படகு ஒன்று அலையில் அடிப்பட்டுச் சென்ற வேளை, குறித்த மீனவர் படகினை மீட்க முற்பட்ட வேளை, கடல் அலையில் சிக்குண்ட படகு, தொழிலாளி மீது வேகமாக மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

அதனை அடுத்து அங்கிருந்த சக தொழிலாளிகள் அவரது சடலத்தை மீட்டு வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மருதங்கேணிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,60)

## இரத்த வாந்தி...

சேர்ந்த தெ.கோபாலசாமி (வயது-39) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த குடும்பஸ்தர் கடந்த 24 ஆம் திகதி கிளிநொச்சியில் உள்ள உறவினரின் வீட்டுக்குச் சென்றிருந்தார். நேற்று முன்தினம் அதிகாலை 3.00 மணியளவில் அங்கு இரத்த வாந்தி எடுத்த நிலையில் சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

தொடர்ந்து மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு உயிரிழந்தார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-7,60,104)

## சூம் மூலம்...

தார் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

பொதுநிதியை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ரணில் விக்கிரமசிங்க கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

நேற்று கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் அவருக்கு எதிரான வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு மேலும் ஓய்வு தேவை என மருத்துவர்கள் பரிந்துரைத்ததால் நீதிமன்றில் முன்னிலையாகாமல் சூம் (Zoom) தொழில்நுட்பம் மூலம் வழக்கு விசாரணையில் இணைந்து கொண்டார். (ம-7)

## 300 சட்டத்தரணி...

வழக்கு விசாரணையில் அவருக்கு ஆதரவாகப் பிரசன்னமாகியிருந்தனர்.

அரச நிதியைத் தவறாகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான வழக்கு நேற்று கொழும்புக் கோட்டை நீதவான் நிலுபுலி லங்காபுர முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது சட்டத்தரணிகளான திலக் மாரப்பன, அனுஜா பிரேமரத்ன, உப்புல் ஜெயசூரியா, அலி சப்ரி ஆகியோர் ரணில் விக்கிரமசிங்கவுக்காக ஆஜராகினர்.

மேற்படி சட்டத்தரணிகளுடன், சுமார் 300க்கும் மேற்பட்ட சட்டத்தரணிகளும் ரணிலுக்கு ஆதரவாக நீதிமன்றத்தில் பிரசன்னமாகினர். (ம-7)

## சங்கானையில்...

கடந்த ஞாயிற்றுக்கிழமை (24) இரவு தவறுதலாக பிறசருக்குப் பாவிக்கப்படும் மாத்திரையை அதிகளவு உட்கொண்டுள்ளார்.

இதனையடுத்து வயிற்றோட்டம், வாந்தி ஏற்பட்ட நிலையில் சங்கானை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை (26) அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம்மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## ‘அநுர கோ...

கொழும்புக் கோட்டை நீதவான் நீதிமன்றத்தின் அருகில் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான வழக்கு நேற்றுக் கொழும்புக் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது.

இதன்போது நீதிமன்ற வளாகத்தைச் சுற்றி எதிர்க்கட்சியினர் மற்றும் ரணிலின் ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

“அடக்கு முறைக்கு எதிராக” என்ற பெயரில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதனால் கோட்டை நீதவான் நீதிமன்றத்துக்கு அருகில் பதற்றமான நிலைமை ஏற்பட்டது. வீதிகளில் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டது. (ம-7)

## செல்...

எதிர்கொள்வார்கள் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க எச்சரித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பொதுச் சொத்தைக் கொள்ளையிட்டு வீணாக்கும் அரசியல் கலாசாரம் முடிவுக்குக் கொண்டு வரப்படும்.

அத்துடன் அதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் ஒருபோதும் பின்வாங்கப்படாது எனவும் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் புதிய சட்டம் செப்ரெம்பரில் நிறைவேற்றப்படுவதுடன், முன்னாள் ஜனாதிபதிகளுக்கு ஒதுக்கப்பட்ட அரசுக்குச் சொந்தமான அனைத்து குடியிருப்புகளையும் அரசாங்கம் திரும்பப் பெறும்.

நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும்போது, முன்னாள் தலைவர்களுக்கு ஆடம்பர அரச குடியிருப்புகளை வழங்குவது ஏற்றுக் கொள்ள முடியாதது.

அத்துடன் சட்டம் அனைத்து குடிமக்கள் மீதும் சமமாக அமுல்படுத்தப்படும். ஊழல் குற்ற வாளிகள் என நிரூபிக்கப்பட்டவர்கள், அவர்களின் பதவி அல்லது செல்வாக்கு எதுவாக இருந்தாலும், கடுமையான தண்டனையை எதிர்கொள்வார்கள் என்றும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.08.26
சீட்டிழுப்பு இலக்கம் 5933
L 6 7 7 5 2 8
அத சம்பத
L 7 5 2 8
சீட்டிழுப்பு இலக்கம் 0508
National Lotteries Board

சுப தவசக
திகதி 2025.08.26
0049
மேடம் 12 16 48 52

தன நிதானய
திகதி - 2025.08.26
சீட்டிழுப்பு இலக்கம் - 1963
A 21 48 58 74 A
Double Chance 92428

மெகா பவர்
திகதி 26/08/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2281
P 01 04 64 65 70

ஜய JAYA
திகதி 2025.08.26
0201
B 5 5 6 9

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4175
சீட்டிழுப்பு திகதி | 26.08.2025
I 51 57 73 79
I
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.08.26
சீட்டிழுப்பு இலக்கம் 1242
கன்னி 27 32 45 56 கன்னி
21513

உத்தியோகபூர்வ முடிவுகள்
26.08.2025 வெற்றி வாரம் 0641
D 2 4 9 4 2 4
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22.852.774.40

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2907
சீட்டிழுப்பு திகதி 2025.08.26 தினம் செவ்வாய்க்கிழமை
30 37 48 65 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.54,904,506.40

சனிதா
திகதி 26.08.2025 வெற்றி வாரம் 5068
18 31 35 47 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,966,358.80
ரூ. 50,000/-

சசிரி
வெற்றி வாரம் 0756
சீட்டிழுப்பு திகதி 26.08.2025
செவ்வாய்க்கிழமை
21 29 35
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4619
சீட்டிழுப்பு திகதி 26.08.2025 தினம் செவ்வாய்க்கிழமை
16 32 38 52 ரிஷபம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.7,399,292.00

அங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
O 24 15 47 58 75
2083
26.08.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.590,176,765.80

செவ்வாய்க்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.86,071,451.20
வெற்றி வாரம் 2733
சீட்டிழுப்பு திகதி 2025.08.26
ADA KOTIPATHI
24 31 44 48 H

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3745)

076 825 7716 (ஆகாஸ்)

## கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3710/- |
| 11-16 Kg | 2660/- |
| 21-27 Kg | 2480/- |

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

(C-3746)

UK 11Kg - 1390/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241, 076 822 6237

## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)

சம்பளம் 30,000/- முதல் 50,000/-

வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை (C-3746)

V2 TRAVELS 076 1410725, 076 8226236
v2vacancies@gmail.com

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127

## மணப்பெண் தேவை

01.காரைநகர், இந்து, 1994, மகம், Msc, Technology Graduated Engineer, UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 54246
02.காரைநகர், இந்து, 1993, சதயம், BSc, MSc, Software Engineer, Australia மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 49745
03.வட்டுக்கோட்டை, இந்து, 1988, பூசம், Accounting& Finance, Data Analysis, Australia Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 45522
04.நாச்சிமார் கோவில், இந்து, 1991, கார்த்திகை, Master of Accounting, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 43419
05.மிருசுவில், இந்து, 1993, ரேவதி, Bio Medical - ACCA, Assistant Accountant, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 38808
06.இணுவில், இந்து, 1990, அனுஷம், Quantity Surveyor, Engineer, Australia Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 34984
07.வட்டுக்கோட்டை, இந்து, 1992, விசாகம், Management Degree, BSc, Shipning CPA, Canada Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 33308
08.காரைநகர், இந்து, 1992, பூரட்டாதி, Civil Engineering, Australia Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 32827
09.கைதடி, இந்து, 1994, கார்த்திகை, Hons in phsycology, Canada citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 51091
10.கொக்குவில், இந்து, 1993, பூரம், Aeronotical Engineering, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 33457

எம்மிடம் எல்லா நாட்டிலும், எல்லா ஜாதியிலும் Unmarried, Divorce மாப்பிள்ளைகளும் மணப்பெண்களும் உண்டு. (5157)

S.Sharma J.P 077 539 3728
www.thaalee.com

## மேசன் வேலைக்கு ஆட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் முன்னணியில் இயங்கிவரும் ஒப்பந்த நிறுவனம் ஒன்றிற்கு மேசன், கூலி வேலையாட்கள் தேவை.

- சாப்பாடு, தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்
- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

(C-3744)

தொடர்பு: 076 980 6787

## பெண் பணியாளர் தேவை

யாழில் இயங்கிவரும் தேசிய லொத்தர் சபை அலுவலகம் ஒன்றிற்கு கணனி அறிவுடைய கணக்காளர் பதவிக்கு பெண் பணியாளர் தேவை.
(குறித்த அலுவலகத்தில் பெண் ஒருவர் பணிபுரிகிறார்) (5154)

077 603 1723

## SB TRAVELS AND TOURS PVT LTD

சகல நாடுகளுக்குமான விமான டிக்கெட்டுக்களை குறைந்த விலையிலும் மற்றும் யாழ்ப்பாணம், கொழும்பிலிருந்து இந்தியாவிற்குச் செல்ல Rs.37,900 இருந்தும், இந்தியா விசாக்களும் செய்து தரப்படும். (C-3742)

யாழ்ப்பாணம் : 021 222 8555, 076 691 1082
கொழும்பு : 011 244 6666, 077 108 3480
இணையத்தளம் : www.sbtravels.lk (Conditions apply)

## மணமகள் தேவை

யாழ்., கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 39 வயதான விவாகரத்தான உயர் வருமானம் பெறும் மணமகனுக்கு மணமகள் தேவை.
சீதனம் எதிர்பார்க்கப்படவில்லை (5149)

072 527 8740

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் அரைக்கும் ஆலைக்கு வேலையாட்கள் தேவை. அனுபவமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும். (5155)

தொடர்பு: 076 155 9905

## வேலையாள் தேவை

நாவற்குழியில் அமைந்துள்ள சிவபூமித் தோட்டத்திற்கும் பசு பராமரிப்பிற்கும் முன் அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தங்குமிடம் வழங்கப்படும். (5147)

077 844 8796
075 629 0850

## மரண அறிவித்தல்

தோற்றம் 13 - 01 - 1960



மறைவு 21 - 08 - 2025

### ஜசிந்தா (வசந்தி) நவரத்தினம்

உரும்பிராய் மேற்கு, சிவகுலவீதியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் வடக்கு, தில்லையம்பதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஜசிந்தா (வசந்தி) நவரத்தினம் அவர்கள் கடந்த (21.08.2025) வியாழக்கிழமை அன்று காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற மனுவல் கிறிஸ்தோபர் மற்றும் - பூபதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னன் - செல்வி தம்பதியரின் மருமகளும் பொன்னன் நவரத்தினம் (நவம், ஓய்வுபெற்ற பனை அபிவிருத்திச்சபை) அவர்களின் அன்பு மனைவியும் மேரி ராதிகா, மேரி லிகோரியா, மேரி அனிற்றா, டக்ளஸ் (சுதன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சொப்னா (சுவிஸ்), சர்மினா, ரதீபன் (பனை அபிவிருத்திச் சபை), தீபனா (ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நிரோஜன் (சுவிஸ்), ஸ்ரீராம் (ராம் - கிருபா லேனர்ஸ், பயிற்றுவிப்பாளர்), ரேகா (ரம்சி), ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கிஷாலன், யக்சிதா, அஷ்வின், அஜய், ரித்திகா, டார்னிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.08.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமரகோட்டம் வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில். (5148)

தகவல் : குடும்பத்தினர்
நவரத்தினம் ரதீபன்
077 833 5673, 077 224 7909

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் மாணிக்கம் நாகேந்திரம்

(ஓய்வு நிலை தபால் அதிபர் யாழ்.பிரதம தபாலகம்)

தோற்றம் : 1949.12.21 | மறைவு : 2019.10.19

இறுதிவரை உடனிருப்பீர் என நினைத்த எனை மறந்து
சடுதியிலே போனதேனோ என்னவரே!
மகள் பறந்து போன துயர் மறையுமுன்னே உமையிழந்து
மனமுடைந்து மடிவதெந்தன் விதியோ?
அயலவரும் அடுத்தவரும் உமதருமை எடுத்துரைத்து
அடி வயிறு பற்றித்தான் எரிகிறதே
அமைதியுடன் அரனடியில் துயிலடைந்த மன்னவனே
எனக்குமொரு இடமெடுத்து வையுமையா!

## 27ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் நிஷாலினி நாகேந்திரம் (சுகி)

தோற்றம் : 1981.08.21 | மறைவு : 1998.08.25

சந்ததிகள் பெருகிட நீ வழிசமைப்பாய் என நினைக்க
சத்தமின்றி வாழ் வயதில் போயினயே!
எந்தவிதம் உனை மறப்பேன் என்னுதிரம் துடிக்கிறதே
எனைத் துடிக்க வைத்துவிட்டாய் என் மகளே!
உனதருமைத் தகப்பனையும் உனதருகில் வைத்துவிட்டாய்
எனையழைக்க தாமதமேன் சொல்லு?
ஆண்டு பல போயினுமென் மடி கிடந்த மழலையுந்தன்
நினைவதுவே வாட்டுதென்னை நித்தம்.

அல்வாய் தெற்கு,
இலகடி, அல்வாய். (C-3743)

திருமதி ஞானகலாவதி
நாகேந்திரம்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.101, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org